1174

1.12.57

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



13

# செய்திகள்

## அணுச் சக்திக் கப்பல்

துறைமுகத்துக்கே வராமல் கடலில் ஒரு வருஷத்துக்குமேல் செல்லக் கூடிய அணுச் சக்திக் கப்பல் ஒன்றை ரஷ்யா கட்டி முடித்திருக்கிறதாம். இந்தக் கப்பல் பனிக் கட்டிகளை உடைக்க உபயோகப்படுத்தப்படுமாம். இதில் மாலுமிகள் மட்டுமேதான் இருக்க முடியுமாம்.

## பசியா மூலிகை

ஜைனர்களின் புண்ணியஸ்தலமான குல்பாக்கில் ஒரு மூலிகை இருக்கிற தாம். அந்தச் செடியின் இலைகளைப் பறித்துத் தின்றால் பன்னிரண்டு நாட்களுக்குப் பசியே எடுக்காதாம். 'ரிஷி போஜனம்' என்ற அந்த மூலிகையின் வேர்களை மத்தியப் பிரதேச கவர்னராக இருந்த டாக்டர் பட்டாபி சீதாராமையா சமீபத்தில் ஆந்திரா வைத்திய மகாநாட்டில் எடுத்துக் காட்டினார்.

## இலங்கையில் வளரும் எழுத்தாளர் சங்கம்

இலங்கையில் உள்ள வளரும் எழுத்தாளர்கள் திருச்சியில் உள்ள வளரும் எழுத்தாளர் மத்திய சங்கத்தின் கிளைச் சங்கம் அமைக்க எண்ணியிருக் கிறார்கள் அதில் சேர விரும்புவோர், 'ஜோவலன்வாஸ், 96/3, மோதிர வீதி, கொழும்பு 15' என்ற முகவரிக்கு எழுதித் தொடர்புகொள்ளும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அன்பர் ஜோவலன் வாஸ் வளரும் எழுத்தாளர் சங்கத்தின் பிரதிநிதி ஆவார்.

## ஸ்ரீநிவாஸ காந்தி நிலையம்

ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள ஸ்ரீநிவாஸ காந்தி நிலையத்தில் அகில இந்தியக் குழந்தைகள் தினம் ஸ்ரீமதி சரஸ்வதி பாண்டுரங்கம் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. கண்ணன் ஆசிரியர் 'ஆர்வி' குழந்தைகளுக்கு வேடிக்கைக் கதைகள் கூறினார். நிலையத்தின் பள்ளிக் குழந்தைகளுக்குப் பரிசுகளும் இனிப்புகளும் வழங்கப்பட்டன. இ. எஸ். எல். ஸி. மாணவிகள் கலை நிகழ்ச்சி ஒன்றை நடத்திக் காட்டினார்கள்.

## கஸ்தூரிபா சிறுவர் சங்கம்

சென்னை, மயிலாப்பூரில் உள்ள கஸ்தூரிபா சிறுவர் சங்கத்தில் நேரு பிறந்த தின விழா கண்ணன் ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. சிறுவர் சிறுமியர் நாடகங்களும் நடைபெற்றன. பின்னர் அகில இந்தியக் குழந்தைகள் தினத்தில் அவர்கள் நடத்திய சித்திரப் போட்டியின் பரிசளிப்பு விழா ஸ்ரீமதி மேரி கிளப்வாலா ஜாதவ் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. குழந்தைகளைப் பாராட்டி, ஸ்ரீ கி. சந்திரசேகரன் அவர் கள் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினார்.

## அமெரிக்கச் சந்திரன்

ரஷ்யாவைப் போலவே அமெரிக்காவிலும் வானில் ஒரு செயற்கைச் சந்திரனைப் பறக்கவிடப் போகிறார்களாம். ராக்கெட்டின் உதவியால் ஆயிரம் மைலுக்குமேல் சென்று பூமியைச் சுற்றிவரும் செயற்கைச் சந்திரன் மீண்டும் பூமிக்கே ராக்கெட்டின் உதவியால் திரும்பி வரும்படி அதை அமைக்கப் போகிறார்களாம். ஆனால் இதுவரை அந்த முயற்சியில் வெற்றி ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

# கண்ணன்

## பொருளடக்கம்

மலர்: 8 இதழ்: 23

1 - 12 - '57

குழந்தைகளே! பக்கம் 2
வீர நங்கை .. 3
சிலந்தி .. 8
வீரம் பெரிதா, மதி பெரிதா? .. 9
டிக்..டிக்..டிக் .. 13
சிவப்புக் கல் .. 14
ஒட்டகம் .. 17
குற்றச்சாட்டு .. 19
நீங்களும் நானும் .. 24
கடற் புலி .. 27
சுதந்தரக் குரங்கு .. 29
அட்டைப் படம்!
போட்டோ:
ஏ. வி. ராமமூர்த்தி
செய்திகள் - 2-ஆம் அட்டை
பேனு நண்பர்கள் 3-ம் அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## பந்து விளையாட்டு!



# குழந்தைகளே!

இந்த இதழில் தொடர்கதையைப் பற்றிச் சில விவரங்கள் கூற விரும்புகிறேன். புதிய ஆண்டின் தொடக்கத்தில் புதிய தொடர்கதை ஒன்று ஆரம்பமாவதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே சமயத்தில் தொடர்கதைப் போட்டியில் பரிசு பெற்ற கதையையும் பொங்கல் இதழிலிருந்து தொடங்க எண்ணியிருக்கிறோம். போட்டிக்கு வந்துள்ள கதைகளைப் பஞ்சாயத்தார்கள் பரிசீலனை செய்து வருகிறார்கள். சென்ற ஆண்டுப் போட்டியைப்போலவே இந்தத் தடவையும் தொடர்கதைகள் மிகுதியாக வந்துள்ளன. இதன் முடிவை ஜனவரி முதல் தேதி இதழில் நீங்கள் எதிர்பார்க்கலாம். அதை முன்னிட்டே பரிசீலனை மும்முரமாக நடைபெற்று வருகிறது. ஆக, இரண்டு தொடர்கதைகள் வழக்கம்போல் புது வருஷத் தொடக்கத்தில் வெளிவருகின்றன. நடுவில் சில மாதங்கள் தொடர்கதை வரவில்லையே என்று ஏங்கியவர்கள் குறை நீங்கிவிடும் என்று எண்ணுகிறேன்.

இரண்டு தொடர்கதைகளும் புது ஆண்டின் சிறந்த பரிசுகளாக விளங்குவதுடன், மேலும் பல நூதனமான பகுதிகள் புத்தாண்டுக் கண்ணனில் இடம் பெற்றிருக்கும். பிரபல எழுத்தாளர்கள் அவ்வப்போது எழுதுவதுடன் வளரும் எழுத்தாளர்களுக்கும் குழந்தை எழுத்தாளர்களுக்கும் கண்ணனில் அதிக வாய்ப்புத் தர எண்ணியுள்ளோம். மற்றும் சித்திரக் கதை, எழுத்தாளர்கள் பகுதி, கவிதைப் பகுதி, நீங்களே செய்து பார்க்கும் விஞ்ஞானப் படங்கள், கட்டுரைகள், பத்து வயதுக்கு உட்பட்டவர்களுக்கான பாட்டுக் கதைப் பகுதிகள் எல்லாம் கண்ணனில் நிறைந்திருக்கும்.

புதுத் தொடர்கதைகளும் புதுப் பகுதிகளும் ஆண்டுத் தொடக்கத்திலேயே ஆரம்பமாவதால் சந்தாதார்கள் எல்லாரும் தங்கள் புது ஆண்டுச் சந்தாவை, முன்னதாகக் கட்டிவிட வேண்டுகிறேன். உங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு, தொகையை மணியார்டர் மூலமாகவோ, போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அனுப்பலாம். இதுவரையில் சந்தாதாராக ஆகாதவர்கள்கூட, புதிய சந்தாதாராக வேண்டும் என்பது என் கோரிக்கை. உங்களுடைய மகத்தான ஆதரவுதான் கண்ணன் பத்திரிகைக்குப் பெரிய பலமாகும். கண்ணன் என்ற பெயர் கேட்டாலே உங்கள் கருத்தில் அன்பு சுரக்க வேண்டும். உங்கள் இனிய தோழனாகவும் உங்கள் அறிவைத் தூண்டும் ஆசானாகவும் உங்கள் வளர்ச்சிக்கு உதவும் உற்றார்போலவும் கண்ணன் என்றும் விளங்குகிறான். குழந்தைக் குலமே இந்தக் கண்ணனுக்குக் கோகுலமாகும்.

புத்தாண்டு இதழ் அதிகப் பக்கங்களுடனும், புதிய தொடர்கதையோடு முழு நீளக் கதையுடனும் வெளிவருகிறது. உங்கள் ஆவலை உணர்ந்து ஆவன செய்வதே எங்கள் பெரும் கடமையாகும்.

—ஆசிரியர்.

**காளிகோட்டை ரகசியம்**

**'ஜனு' எழுதும் புதிய தொடர்கதை**

**1-1-'58 இதழில் ஆரம்பமாகிறது!**



# வீர நங்கை

இரா. ஜயராமன்

''மகாராணி!....''

தழுதழுத்த குரலில் அரண்மனைச் சேவகன் ஏதோ சொல்லத் தயங்கினான்.

''என்ன செய்தி? உம்! சீக்கிரம் சொல்!'' அச்சத்துடனே கேட்டாள் அரசி, கோதைநாயகி.

''அரசர்..வீர..மரணம்..எய்தி விட்டார்'' என்று கூறி வாயில் குருதி வழிய நின்றான் சேவகன்.

நெஞ்சு வெடிக்கும் அந்தச் செய்தி கேட்டு மலைத்து நின்றாள் முல்லை நாட்டரசி கோதைநாயகி, அரசன் சோமசேகரனின் தரும பத்தினி. ஒன்றும் தோன்றாமல் கவலை தோய்ந்த முகத்துடன் மஞ்சத்தின்மீது சாய்ந்துவிட்டாள். சிறிதுநேரம் கழித்து என்ன தோன்றிற்றோ, என்னவோ திடீரென எழுந்தாள். அவள் முகத்தில் புதுமை ஒளி வீசிற்று. அழைப்பு மணியை இருமுறை ஒலித்தாள். ஒரு வீரன் வந்து வணங்கி நின்றான். அரசி ஒரு கடிதம் எழுதி அதை அவனிடம் கொடுத்து அவனையும் அழைத்துக்கொண்டு தனது அந்தப்புரத்திலிருக்கும் ஒரு ரகசியச் சுரங்கத்தின் வாயிலை அடைந்தாள். சேவகனை நோக்கி, ''இவ்வழியாகப் போனால் நகர எல்லையிலிருக்கும் ஆற்றங்கரை மண்டபத்தை அடையலாம். அங்கிருந்து இதை நாக நாட்டிற்குக் கொண்டுபோய், அந்நாட்டரசரும் எனது அருமைத் தமயனுமான இளங்கோவனிடம் கொடுத்து இவ்வழியே திரும்பிவா! ஜாக்கிரதை!'' என்று கட்டளையிட்டாள். வீரன் அரசியை வணங்கி விட்டுச் சிறு விளக்கேந்தி உள் நுழைந்து மறைந்தான். பிறகு அரசி தன் அறையில் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

* * *

பண்டைக்காலத்தில் வீரம் செழித்த நாடுகளுள் நாகநாடும் ஒன்றாகும். அந்நாட்டுப் பெண்டிரும் ஆடவரும் வாளேந்திப் போர் செய்வதில் வல்லவர்கள். அத்தகைய நாட்டின் நீதிவழுவா மன்னன், மதிவர்மனுக்கு இளங்கோவனும் கோதைநாயகி என்ற ஒரு பெண்ணும் பிறந்தனர். மகள் பிறந்த சில நாட்களில் மதிவர்மனின் மனைவி இவ்வுலகை நீத்தாள். பின்னர் அம்மன்னன் தம்மிரு மக்களையும் தம்மிரு கண்களாகப் போற்றிப் பேணி வளர்த்து வந்தான். பருவத்தில் அவர்களுக்கெல்லாப் பயிற்சிகளையும் கற்பித்தான். மக்களும் வளர்பிறைபோல் வளர்ச்சியுற்று வாலிபப் பருவமுற்றனர். எழில் மிகுந்து, உலகம் போற்றும் அழகுடையவளாய் இருந்தனள் கோதை. பன்னாட்டரசர்களும் அவள் எழிலைக் கண்டு வியந்து, அவளை மணக்க முன் வந்தனர். ஆனால் அவர்கள் அனைவரும் ஏமாற்றம் அடைந்தார்கள். நாக நாட்டிற்குப் பக்கத்து நாடான வேங்கை நாட்டரசன் முரட்டுக் குணம் உள்ளவன். சேனை மிகுந்தவன். எப்படியாவது கோதையை மணக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தான்.

ஒரு நாள் இளவரசன் இளங்கோவன் மன்னன் மதிவர்மனிடம் வந்து, ''தந்தையே நானும் என் தோழனும் (மந்திரி குமாரன்) நாளை நம் நாட்டையடுத்துள்ள காட்டிற்குச் சென்று சிறுத்தை வேட்டையாடப் போகிறோம். அநுமதி தர வேண்டும்'' எனக் கேட்டான்.

''மைந்தனே! மகிழ்ச்சியுடன் போய் வா. ஆனால் வனத்தில் ஒவ்வோர் அடியும் முன்னேறும் போது மிகக் கவனமாக இருத்தல் வேண்டும். விலங்குகள் மிகக் கொடியவை; திடமுள்ளவை'' என்று சொல்லியனுப்பினான் அரசன்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கோதை, ''அண்ணா! அண்ணா! நானும் உன்னுடன் வேட்டைக்கு வருகிறேன். எனக்கும் ஆவலாயிருக்கிறது'' என்று சொல்லிக்கொண்டே, உள்ளேயிருந்து ஓடிவந்தாள். ''கண்ணே! நீ போகவேண்டாம். அந்த அடர்ந்த காட்டில் ஆடவர்கள் நுழையவே அஞ்சுவார்கள். ஆகையால் இளங்கோவன் மட்டும் போகட்டும். இன்னொரு நாள் உன்னைத் தக்க துணையுடன் அழைத்துப் போகிறேன், அம்மா!'' என்று அவள் தலையை வருடியபடியே கூறினான் அரசன்.

''ஆமாம். கோதை; நீ வேண்டாம். நீயோ பெண். அதிலும் சிறியவள். காட்டு மிருகங்கள் எல்லாம் ஒன்றாகச் சீறுவதைக் கண்டாலே நீ மூர்ச்சித்து விழுந்து விடுவாய்'' என்றான் இளங்கோவன்.

''பெண்ணென்றால் தைரியம் இல்லை என்று எண்ணிவிடுவதா? அவர்களுக்கு வீரம் இருக்காதா? நெஞ்சிலே உரம் இருக்காதா? என்ன அண்ணா, நீங்கள் சொல்லுவது!'' என்று சிணுங்கினாள் கோதை.

''போகக்கூடாது என்றால் போகக்கூடாதுதான். பிடிவாதம் செய்யாதே. நீ போ, உன் அந்தப்புரத்திற்கு'' என்று அரசன் கண்டிப்புடன் கூறவே கோதையும் உடனே உள்ளே சென்றாள்.

மறுநாள் காலை, பொழுது நன்றாக விடிந்திருந்தது. வானமெங்கும் செம்மை படர்ந்து, வண்ணம் தீட்டியது போலக் காணப்பட்டது. இருந்த போதிலும் அந்தக் காட்டில் சிறிது இருளும் நிச்சப்தமும் குடிகொண்டிருந்தன. அந்தக் காட்டில் ஒரு குதிரை வீரன் வந்து கொண்டிருந்தான். அவன் தோளில் வில் இருந்தது. இடையிலே வாளும், கையிலே ஈட்டியும் இருந்தன. எப்பக்கம் போகலாம் எனத் தெரியாமல் திகைத்தான். பால்வடியும் வதனம்; அதிலே மீசை இன்னும் அரும்பவில்லை. குதிரையைத் தெற்கே செலுத்தினான். திடீரென ஒரு சத்தம். ஆம்! அது வேங்கையின் குரல்தான். மிகப் பயங்கரமாக ஒலித்தது. அத்திசையில் சிறிது தூரம் சென்று பார்த்தான் அவ்விளைஞன்; ஒரு பெரிய வேங்கைப் புலியினிடம் ஒருவன் சிக்கித் தவிப்பதைக் கண்டான். இன்னும் சில விநாடிகளில் அவன் இறப்பது உறுதியெனக் கண்டான். அவ்வளவுதான்! மறு கணம் வானம் அதிரும்படியான ஒரு பெரிய கர்ஜனை கேட்டது. புலி கீழே சாய்ந்தது. அதன் உடலில் நீண்ட ஈட்டி பாய்ந்திருந்தது. ஆம்! அந்தக் குதிரை வீரன்தான், அதைக் கொன்றவன். புலியினிடம் சிக்கித் தவித்த மனிதனை உற்று நோக்கிய இளைஞன் வியப்புடன், ''என்ன, வேங்கை நாட்டு மன்னரே! நீரே வேங்கையினிடம் மாட்டிக்கொண்டுவிட்டீரே! ஏன் இங்கே வந்தீர்?'' எனப் பரிகாசமாகவும் அன்புடனும் கேட்டான்.

பெருமூச்சுடன், ''ஆம் தம்பி, வேங்கை நாட்டரசன்தான். வேட்டையாட வந்தேன். எதிர்பாராத விதமாய் இந்த வேங்கையினிடம் சிக்கிவிட்டேன். நீ யாரப்பா? என்னை உனக்குத் தெரியுமா?''

''ஓ! தெரியுமே! உமது ஓவியத்தை எமது அரண்மனையில் பார்த்திருக்கிறேன். எங்கள் இளவரசி கோதைநாயகியை மணக்க வேண்டி நீர் உம் உருவப்படத்தை அனுப்பியிருக்கிறீர். அதன்மூலம் அறிந்துகொண்டேன்.''

''ஆ! அப்படியா? கோதை என்ன சொன்னாள்? இப்போது யாரைத் தேர்ந்தெடுத்தாள்? என்னைத்தான் தேர்ந்தெடுத்திருப்பாள்

இல்லையா?'' என்று ஆர்வத்துடன் கேட்டான்.

''இல்லை, அரசே, இல்லை. எல்லோருடைய ஓவியங்களையும் சாதாரணமாகவே ஒதுக்கிவிட்டாள். பிடிக்காமையால் உங்கள் உருவப் படத்தை உடைத்தெறிந்து விட்டாள்!'' என்று கூறி இளைஞனும் நகைத்தான்.

''அப்படியா! என்ன ஆணவம்! அவள்செருக்கை அடக்கவேண்டும். அவள் என்னிடம் இந்நேரம் தனியாகச் சிக்கினால்....என்ன செய்வேன் தெரியுமா?'' என்று வெகுண்டான் வேங்கையன். அப்பொழுது எதிர்பாராவிதமாக அந்தக் குதிரை வீரனின் தலையணி ஒரு மரக்கிளை தடுத்து கீழே விழ, முடி அவிழ்ந்து தொங்கியது. என்ன ஆச்சரியம்! வீரனது தோற்றம் போய், வீர நங்கையினது தோற்றம்! ஆம்! கோதைநாயகிதான் ஆண் உடையில் காட்சியளித்தாள் அங்கே. அதைக் கண்ட வேங்கையன் வியப்பெய்தினான்!

''ஆ! கோதைநாயகி!'' என்று விளித்து, கண்களில் வெறியும், வெகுளிக்கனலும் தெறிக்க அவளை அணுகினான். ''அரசர்களை நிராகரித்த ஆரணங்கே! என் சரித்திரத்தைச் சிதைத்த சீரணங்கே! உன்னை உன் செருக்கடங்க வலியக் கொண்டுபோய் மணம் செய்து கொள்ளப் போகிறேன்!''

''சீ! கிட்டே நெருங்காதே. வேங்கையினிடம் சிக்கித் தவித்த வேங்கையனே! நெருங்கினால் நொறுக்கிவிடுவேன். நெஞ்சிலே வீரம் இருந்தால், கையிலே வலுவிருந்தால், எடுத்துக்கொள் உனது வாளை இப்பொழுதே! தடுத்துக் கொள் உனது சாவை! இந்தா! இந்த வாளுடன் பேசு!'' என்று கோதை வாளை உருவினாள்.



''ஓ! வாள்பயிற்சிகூடத் தெரியுமா?'' என்று வேங்கையன் வாளை யுருவ இருவருக்கும் மும்முரமாகப் போர் நடந்தது. கோதைநாயகியும் வீரத்துடன் போரிட்டாள். எனினும், அந்தோ! நிராயுதபாணியானாள். அப்போது காடு அதிரும்படிச் சிரித்தான் வேங்கையன். கோதை ஓடினாள். பாவம்! சிக்கிக் கொண்டாள், அந்தச் சமயம்:—

என்ன ஆச்சரியம்! முனைபருத்து அடி சிறுத்த மரக்கட்டை ஒன்று திடீரென்று வந்து வேங்கையனது வலது தோளைத் தாக்கிற்று. அவன் கையிலிருந்த வாள் கீழே விழுந்தது. உடனே மரத்திலிருந்து ஒருவன் குதித்து, அவ்வாளைக் கைப் பற்றினான். அவனுடைய முகத்தில் உரோமம் படர்ந்து காட்டு மனிதனைப் போன்று காட்சியளித்தான்.

இச்சமயம் குதிரைகளின் குளம்போசை மிகச் சமீபத்தில் கேட்டது. தனக்கு ஆபத்து நெருங்குவதை அறிந்த வேங்கையன் ஓடி மறைந்து, தன் பரியின் மேலேறிப் பறந்து சென்றான். அப்போது இரண்டு புரவிகளில் கோதையின் அண்ணன் இளங்கோவனும் அவன் தோழனும் வந்திறங்கினார்கள். ''என்ன ஆச்சரியம்! கோதை! நீ இங்கே எப்படி வந்தாய்?'' என்று அவளைப் பார்த்து வியந்தபடியே கேட்டான் இளங்கோவன்.

''உங்களுடன் காட்டுக்கு வர வேண்டும் என்ற ஆசையால் நீங்களறியாமல் தொடர்ந்து வந்தேன். காட்டுக்குள் நுழைந்ததும் உங்களைக் காணவில்லை. இங்கே வந்து சிக்கிக்கொண்டேன்'' என்று அங்கே நடந்தவற்றை விரிவாகக் கூறினாள் அவள்.

பிறகு இளங்கோ அந்தப் புதிய மனிதனை நோக்கி, ''ஐயா, என் தங்கையைக் காத்ததற்கு எவ்வாறு நன்றி செலுத்தப் போகிறேன்? நீர் சமயத்தில் கடவுள்போல் தோன்றியிராவிட்டால் என் தங்கையைப் பாதகன் என்ன செய்திருப்பானோ! நீர் யார்?'' என்று கேட்டான்,

''என் கடமையைத்தான் செய்தேன் நான். ஆனால் நான் யாரென்று கூறிவிட்டால் அது எனக்கே ஆபத்தாக முடியும்'' என்றான் அந்தக் காட்டு மனிதன் சோகம் நிரம்பிய குரலில்.

''நீங்கள் அப்படி எண்ண வேண்டாம். நாங்கள் உங்களுக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டோம். எங்களாலான உதவியைச் செய்வோம். இது சத்தியம்'' என்று உறுதி கூறினான் இளங்கோ. கோதை மௌனமாக அந்தப் புது மனிதனை நன்றியுணர்ச்சியுடன் பார்த்துக்கொண் டிருந்தாள்.

அவனும் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான். ''நான் முல்லை நாட்டு அரசன். என் பெயர் சோமசேகரன். என் தாயும் தந்தையும் இறந்தபிறகு நான் முடிசூட வேண்டியிருந்தது. ராஜ்ய பரிபாலனங்களையெல்லாம் எனது மந்திரியே கவனித்து வந்தான். அவனுடைய வஞ்சகம் எனக்குக் கடைசியில் தான் தெரிந்தது. படைகளை எல்லாம் அவன் பக்கம் சேர்த்துக் கொண்டு எனக்குத் துரோகம் இழைத்தான். நான் தனித்திருக்கும்போது என்னைத் தாக்கிக் கொன்றுவிட வந்தான் அவன். அப்போது என் தாயின் அந்தப்புரத்திலிருந்த சுரங்க வழியாகத் தப்பி ஓடிவிட்டேன். காடுகளில் அலைந்து திரிந்து வருகிறேன். அந்தத் துன்மந்திரியைப் பழிவாங்கச் சமயம் பார்த்துக்கொண் டிருக்கிறேன்.'' கதையை முடித்தான் முல்லை நாட்டரசனான அந்தப் புதிய மனிதன். பின்னர் இளங்கோ தங்கையுடன் சோமசேகரனையும் அரண்மனைக்கு அழைத்து வந்தான்.

பிறகு இளங்கோவின் உதவியால் முல்லை நாட்டரசன் சோமன் அந்த மந்திரியிடமிருந்து தாம் இழந்த நாட்டைக் மீண்டும் கைப்பற்றி, கோதைநாயகியின் விருப்பத்துக் கிணங்க அவளையும் மணந்து இனிது வாழ்ந்தான். மன்னன் மதிவர்மனுக்குப் பின் இளங்கோவன் ராஜ்ய பாரத்தை ஏற்று அரசு புரிந்துவந்தான்.

இப்படி யிருக்கும்போதுதான் வேங்கையன் தன் பகைமையைத் தீர்த்துக்கொள்ளத் திடீரென்று

முல்லை நாட்டின் மீது படையெடுத்து வந்தான். சோமசேகரன் எதிர்த்துப் போராடினன். அவனது படைவீரர்களும் ஆர்வத்துடன் போரிட்டார்கள். ஆனல் வேங்கையனது ஆட்கள் சோமசேகரனை வஞ்சகமாகக் கட்டி இறுக்கிப் பிடித்துக் கொண்டனர். சோமசேகரன் கொலை செய்யப்பட்டு வீழ்ந்தான். ராணி கோதையும் துக்கத்திலாழ்ந்து அண்ணனுக்கு ஆளனுப்பினள்.

* * *

நடு நிசி. எங்கும் அமைதி சூழ்ந்தது. அந்தப்புரத்துச் சுரங்கக் கதவை யாரோ லேசாகத் தட்டும் ஒலி கேட்டது. ராணி சிந்தனை கலைந்து எழுந்துபோய் மெல்லக் கதவைத் திறந்தாள். நாகநாடு சென்ற வீரன் திரும்பிவந்து நின்று கொண்டிருந்தான். ''தாயே! அரசர் இளங்கோவன் பொழுது புலருமுன் சேனையுடன் இங்கே வருகிருராம். தயாராக இருக்கச் சொன்னர்'' என்று மிக மெதுவாகப் பேசினன் அவ்வீரன்,

''சரி..கோட்டைக்கு வெளியே நிலைமை எப்படியிருக்கிறது? வாயிற் கதவை உடைத்து விட்டார்களா?'' என்று படபடப்புடன் கேட்டாள் அரசி.

''நிலைமை முற்றிலும் மோசமாகவே இருக்கிறது, மகாராணி. பொழுது விடிவதற்குள் உள்ளே நுழைந்து விடுவார்கள்போல் தோன்றுகிறது'' என்று நடுங்கிய குரலில் கூறினன் வீரன்.

''சரி, நீ போய் ஆவன செய். இந்தச் செய்தி எதிரிக்குத் தெரியக் கூடாது. ஜாக்கிரதை!'' என்று சொல்லி ராணி மெல்லச் சுரங்கக் கதவை மூடினள். சேவகனும் அந்தப்புரத்தைவிட்டு வெளியில் போய்விட்டான்.

காலைச் சூரியன் தோன்றினன். பேரிரைச்சல் கேட்டது. கோதை உப்பரிகையின்மீது பார்த்துக் கொண்டிருந்தாள். கோட்டை வாயில் பெரும்பாலும் தகர்க்கப் பட்டிருந்தது. எதிரிப் படைகள் உள்ளே நுழைந்தவண்ணமிருந்தன. தூரத்தில் தனது தமயனின் படைகள் புலப்பட்டது. மகிழ்ச்சி பொங்க உள்ளே ஓடினள். சிறிது நேரத்திற்கெல்லாம் கோட்டைக்குள்ளேயும் வெளியேயும் பெரும் போர் நிகழ்ந்தது. வேங்கையன் படைகளில் பாதி ஒரு நொடியில் அழிந்தன. வேங்கையனும், இளங்கோவும் கடுமையாகப் போரிட்டனர். ஆனல் இளங்கோவை ஒருவன் மறைந்திருந்து வாளால் வெட்டிவிட்டான். இளங்கோ திரும்பித் தன்னை வெட்டியவனை நோக்கித் தன் வாளை வீசிக் கொன்ருன். இளங்கோவும் சிறிது நேரத்திற்கெல்லாம் தரையில் சாய்ந்து இறந்தான். வேங்கையன் வெற்றிப் பெருமிதத்துடன் அரண்மனையினுள் நுழைந்தான்.

அவனை முகமூடியணிந்த ஒரு வீரன் கையில் உருவிய வாளுடன் வந்து தாக்கினன். வேங்கையனும் எதிர்த்துத் தாக்கினன். இருவர் வாட்களும் உராய்ந்தன. நீண்ட நேரத்திற்குப்பின் அம்முகமூடியின் தலைப்பாகையும், முகமூடியும் கழல வேங்கை நாட்டரசன், கோதை நாயகியை ஆணுடையில் கண்டு வியப்புடன் நின்ருன். இதுதான் சமயமென்று கோதை தன் வாளை அவன் வயிற்றில் பாய்ச்சினள். தலையையும் வெட்டினள். சிறிது நேரத்திற்கெல்லாம் நெஞ்சத்திலே வஞ்சமுடைய வேங்கையன் குருதிப் போர்வையில் துயின்ருன். கோதை தன் படைக்கு ஊக்கமூட்டி, மாற்ருனின் படையைப் புறமிட்டு ஓடச்செய்து வேங்கை நாட்டையும் கைப்பற்றித் தன் நாட்டுடன் இணைத்துக்கொண்டாள்.

அமைதி நிலவிய பின் கோதை ஒரு நாள் மஞ்சத்தின்மீது வீற்றிருந்தாள். கடந்த காலச் சம்பவங்களை நினைத்துத் தன் கடமைகளைச் செவ்வனே செய்ததாகத் திருப்திகொண்டாள்.

எனினும் மற்ருெரு பெருங் கடமை அவள் உள்ளத்திலிருந்தது. அதுதான் தன் வயிற்றிலிருக்கும் சிசுவைப் பெற்றெடுத்து, வளர்த்துத் தனக்குப்பின் அரசனுகவோ, அரசியாகவோ முடிசூட்டி மகிழ்வது.



# சிலந்தி

தே. ப. பெருமாள்

சிலந்தி வலையை மூலையில்
        சித்திரம்போல் பின்னுது;
கலைஞ னுக்கும் இட்டிடாக்
        கடவுள் கொடுத்த வல்லமை!

வயிற்றுப் பையின் கொழுப்பினால்
        வலையின் நூலை ஆக்குது;
முயன்று சிலந்தி வலையினை
        முடித்தே இன்பம் கொள்ளுது.

இனிக்கும் தனது கொழுப்பினை
        எடுத்து வலையில் சொட்டுது;
இனிப்பைத் தேடும் ஈக்களும்
        இதிலே வந்து சிக்குது!

பட்டா ளத்துச் சிப்பாய்போல்
        பதுங்கிச் சிலந்தி இருக்குது;
தொட்ட வலையில் சிக்கியே
        துடிக்கும் இரையைக் கொல்லுது!

ஓடி யோடி வருகுது;
        ஊஞ்சலாட்டம் ஆடுது;
நாடும் நச்சுப் புழுவினை
        நன்றாய்த் தின்று தீர்க்குது.

அறுந்த இழையை இணைத்திட
        அலுப்பி லாதே உழைக்குது;
சிறந்த முயற்சிச் சிலந்தியின்
        சின்ன வாழ்வும் அற்புதம்!

# வீரம் பெரிதா, மதி பெரிதா?

ப. ரா.

வீரபாண்டியபுரம் என்னும் நகரத்தை வீரகேசரி என்ற மன்னன் ஆண்டு வந்தான். பெயருக்கேற்ப பெரும் தைரியசாலி அவன். போர்த்திறமையுள்ள பிரமாண்டமான சேனையொன்று அவன் வசம் இருந்தது. இதுவரை எங்கும் தோல்வியே கண்டறியாதது.

ஆனால் ஒரு குறைபாடு! வீரகேசரிக்கு வீரம் இருந்த அளவு மதிநுட்பம் கிடையாது!

வீரபாண்டியபுரத்தை அடுத்து மற்றொரு பட்டணம் இருந்தது. அதன் பெயர் கலாவல்லிபுரம். மதிவாணன் என்ற மன்னன் அதன் மீது ஆட்சி செலுத்தினான்.

கலாவல்லிபுரத்து ஜனங்கள் கல்வி யறிவு மிக்கவர்கள். உழைப்பாளிகள். வீண் சண்டை சச்சரவுகளில் ஈடுபடாமல் மெய் வருந்தப் பாடு பட்டுத் தம் நகரத்தின் செல்வ வளங்களைப் பெருக்கினர். மன்னன் மதிவாணனது ஆழ்ந்த அறிவு ஜனங்களுக்குச் சிறந்த வழி காட்டியாக அமைந்தது.

கலாவல்லிபுரத்துச் செல்வச் சிறப்பைப் கண்டு வீரகேசரி வயிறெரிந்தான். பொறாமை விரோதமாகப் பரிணமிப்பது இயற்கை தானே? பல விதங்களில் மதிவாணனைக் கோபப்படுத்திப் போரில் இழுத்துவிட முயன்றான். ஆனால் மதிவாணனோ தன் சொந்தப் பெருமையின் பொருட்டுக் குடிகளின் நல்வாழ்வைப் பலியிட விரும்பவில்லை. போர் என்று மூண்டால் வீரகேசரியைச் சமாளிப்பது சிரமமான காரியம் என்று அவன் அறிவான்.

மதிவாணன் தணிந்து போகப் போக வீரகேசரியின் திமிரும் அதிகரித்து வந்தது. நேர் முகமாகப் போரில் இறங்கக் காரணமில்லாது போனதால் பல விதமான சில்லறைத் தொந்தரவுகள் கொடுத்தான். வீரபாண்டியபுரத்து ஜனங்கள் அத்து மீறிக் கலாவல்லிபுர எல்லைக்குள் பிரவேசித்துக் கொலை, கொள்ளைகள் செய்வது, ஆடுமாடுகளைக் கடத்திச் செல்வது முதலியன சகஜமாயின. இவற்றை ஆட்சேபித்து வீரகேசரிக்கு மதிவாணன் அனுப்பிய கடிதங்கள் பயனற்றவையாயின. இந்த அட்டகாசங்களைப் பின்னிருந்து தூண்டுவதே அவனாயிருக்கும் போது . . . .?

மதிவாணன் வலியச் சென்று வீரகேசரியைச் சந்தித்தான். ''சகோதர! நீ செய்வது சரியல்ல. நாங்கள் உங்களது விவகாரம் எதிலும் தலையிடாதிருக்கும்போது எங்களை நீ வலுச் சண்டைக்கு இழுக்கிறாய். உன் தைரியத்திலும் படைப் பலத்திலும் உனக்குப் பெருமை இருப்பது இயற்கை தான்; என்றாலும் உனக்குச் சமமான பலமுள்ள மன்னனிடம் அல்லவா நீ அவற்றைக் காண்பிக்க வேண்டும்? என் குடிகள் சிறிது கல்வி யறிவு உள்ளவர்கள். போரினால் நாசம் விளையுமேயன்றி நன்மை கிட்டாது என்று உணர்ந்து தான் கூடியவரை ஒதுங்கி வாழ முயல்கிறார்கள். உன்னை நான் வேண்டிக் கொள்கிறேன். எங்களைத் தொந்தரவு செய்யாதே'' என்று நல்ல வார்த்தைகள் கூறித் திருப்ப முயன்றான்.

வீரகேசரி கடகடவென்று நகைத்தான். ''ஓகோ! உங்கள் கோழைத்தனத்தை மூடுவதற்குத் தானா இந்தப் பேச்செல்லாம்? வெறும் கல்வியும் செல்வியும் உங்கள் ராஜ்யத்தில் நிரம்பி வழிந்து விட்டால் போதுமா? சுதந்தரத்தையும் மானத்தையும் காத்துக் கொள்வதற்கு வீரம் அல்லவா முக்கியம்?'' என்று ஏளனமாகப் பேசினான்.

''தற்காப்புக்குக் கேவலம் வீரம் ஒன்றுதான் துணையென்று நினைக்

காதே, தம்பி. வீரத்திற்கு உள்ள சக்தி அறிவுக்கும் உண்டு. ஏன்? வீரத்தைவிடப் புத்திநுட்பம் ஒரு படி உயர்ந்தது என்றுகூடச் சொல்லலாம். குறுமுயலொன்று சிங்கத்தை ஒழித்த கதை நீ கேட்டதில்லையா?'' என்றான் மதிவாணன்.

''அப்படியானல் மதியைக் கொண்டே நீங்கள் எதையும் சமாளித்துக் கொள்ளலாமே! என்னைத் தேடி ஏன் பேச வந்தாய்?''

அப்போதுதான் மதிவாணனுக்கு உண்மையாகவே, அவன்மீது ஆத்திரம் உண்டாயிற்று. 'இனியும் தயங்குவதில் பயனில்லை. இந்த வீரகேசரிக்குப் புத்தி சுற்



பிக்க வேண்டியது அவசியம்' என்று அவன் துணிந்து விட்டான்.

* * *

**வீ**ரபாண்டிய புரத்தின் பிரதான கடை வீதியில், நடு மத்தியில் ஒரு பெரிய கடை திறக்கப் பட்டது. கடையென்ருல் சாதாரணமானதல்ல. உப்பிலிருந்து கற்பூரம் வரையில், குண்டூசி முதல் கடப்பாரை உட்படச் சகல பொருள்களும் அங்கே விற்கப் பட்டன.

அவற்றின் விலைகளோ?

'கொள்ளை மலிவு' என்று சொன்ஞல் போதாது. மற்றக் கடைகளில் ஒரு ரூபாய்க்கு விற்கும் சாமானை இங்கே ஓரணுவுக்கு வாங்கலாம். ஒரு படி அரிசியை இந்த மலிவான விலைக்கு வாங்குபவர்களுக்கு ஒரு ஆழாக்கு உப்பு இனமாகவே கொடுக்கப் பட்டன. இது போல் ஆயிரம் சலுகைகள்.

பின் ஜனங்கள் இதர கடைகளை ஏன் நாடுவார்கள்? இங்கே கும்பல் அதிகரிக்க அதிகரிக்க, நெருக்கடியைச் சமாளிக்க இது போல் இன்னும் பல கடைகள் திறக்கப் பட்டன, பல வருஷங்களாக நகரத்தில் நிலைத்திருந்த வியாபார ஸ்தாபனங்கள் மூடப்பட்டன.

இப்படி நம்பத்தகாத அளவு மலிவான விலைக்குச் சாமான்களை விற்பது யார் என்று மன்னன் வீரகேசரி விசாரித்தான். இந்த மலிவு ஸ்தாபனங்களின் அதிபஞன ஒரு வியாபாரி மன்னன் முன்பு ஆஜராஞன். ''அரசே! நான்தான் பொது ஜனங்களின் நன்மையைக் கருதி இப்படி ஒரு தர்மம் செய்கிறேன். என்னிடம் கணக்கின்றிக் குவிந்து கிடக்கும் செல்வத்தை நான் சாகுமுன்பு நல்ல வழியில் செலவிடுவதே என் நோக்கம்'' என விவரித்தான்.

''அவ்வளவுதானே? செய் அப்பா, தாராளமாகச் செய்'' என்று அவனை உற்சாகப் படுத்தி அனுப்பிஞன் வீரகேசரி. இதைவிட விரும்பத் தக்க விஷயம் வேறென்ன இருக்க முடியும் என்பது அவன் கருத்து. ஆஞல் பாவம்! இந்தத் தாற்காலிக நன்மையால் பின்னிட்டு விளையக் கூடிய தீமைகள் என்னவென்று அவன் எண்ணிப் பார்க்கவில்லை.

அத்தனை ஆழ்ந்து சிந்திக்கும் அறிவுத்திறன் வீரகேசரிக்கு ஏது?

வீரபாண்டிய புரத்தில் மலிவு ஸ்தாபனங்கள் தொடர்ந்து தம் வேலையைச் செய்து வந்தன. இதரர்களின் வியாபாரம் அடியோடு படுத்து விட்டது.

வியாபாரம் மட்டுந்தாஞ? விவசாயமும் கூடத்தான். உள்ளூரில் கொள்ளை மலிவாக விற்கும் அரிசி முதலான தான்ய வகைகளை ஜனங்கள் வாங்குவார்களே யன்றி விவசாயி பாடுபட்டு உழைத்து விளைவித்து அதிக விலைக்கு விற்க முயலும் தானியங்களை வாங்குவார்களா?

வாழ்க்கைச் செலவு மிகக் குறைந்தவுடன் தச்சன், கருமான் ஆகிய இதர எல்லாத்தொழிலாளர்களின் உழைப்பும் கூடவே குறைந்து அவர்களிடையே சோம்பல் குடிகொண்டது. அவர்களது தொழிலுக்குண்டான ஆயுதங்களும் துருப்பிடிக்க ஆரம்பித்தன.

மலிவு ஸ்தாபனங்கள் பண்டங்களைக் கடஞகவும் தரச் சித்தமாயிருந்தன. 'பணம் இல்லையா தம்பி? சரி, பரவாயில்லை. சாமான்களை வாங்கிக் கொண்டு போ. காசு கிடைத்தபோது கொடுத்தால் போதும்'' என்று அள்ளித் தந்தார்கள். ஜனங்களின் சோம்பல் இன்னும் வளர்ந்தது,

இப்படி இரண்டு வருஷங்கள்!

ஒரு நாள் காலை. வீரபாண்டிய புரவாசிகள் கண் விழித்துப் பார்க்கும் போது அவர்களுக்குக் காத்திருந்தது ஒரு பேரதிர்ச்சி.

இத்தனை காலமாக அவர்களது ஜீவநாடி போலிருந்த மலிவுக் கடைகள் இரவுக்கிரவே காலியாகிக் கிடந்தன.

''ஐயோ! இன்றைய உணவுக்கு அரிசி இல்லையே! என்ன செய்வோம்?'' என்ற கூக்குரல் நாற்புறமும் எழுந்து வானைப் பிளந்தது.

கடைகளில் அரிசி இல்லை.

அரிசி மட்டுந்தாஞ? பருப்பு, உப்பு, புளி முதலியனவும் இல்லை.



விவசாயி பார்த்தான். கலப்பையைச் செல் அரித்திருந்தது. சேணியனது தறிக்கும் அதே கதிதான்.

இப்படி எங்கும் ஒரே அமளிதுமளியாக இருக்கும் போது இன்னுமோர் அபயக் குரல் கிளம்பியது. அபாய மணி ஜாம்ஜாமென்று ஒலித்தது.

ஏன்? கலாவல்லிபுரத்துச் சைன்யம் வீரபாண்டிய புரத்தை நாற்புறமும் வளைத்துவிட்டது.

வீரபாண்டிய புரத்துப் பட்டாளமும் வீரகேசரியின் தலைமையில் வீறாப்புடன் கிளம்பியது என்னவோ உண்மைதான். ஆனால் கலாவல்லிபுரத்தாரை அவர்களால் அதிக நேரம் எதிர்த்து நிற்க முடியவில்லை. ஏனென்றால் அவர்கள் அனைவருக்குமே உணவில்லை. நல்ல பசி, அவர்களது உணவும் மலிவு விலைக் கடைகளிலிருந்து வந்துகொண்டிருந்தது தானே?

சில மணி நேரங்களுக்குள்ளாக வீரபாண்டியபுரம் வீழ்ச்சியுற்றது. வீரகேசரி கைது செய்யப்பட்டு மதிவாணன் முன்பு கொண்டு நிறுத்தப் பட்டான். பழைய அகம்பாவம் அடங்கிப் பூனை போல் நின்றான் அவன். தன் நகரத்துப் பொருளாதாரத்தையே சிதைத்து உயிரைக் குடித்த மலிவு விலைக் கடைகளின் மர்மம் என்னவென்பது இப்போதுதான் அவனுக்கு விளங்கியது.

''வீரகேசரி! பார்த்தாயா! உன் பலத்தைப் பற்றி இறுமாந்திருந்தாயே! புத்தி நுட்பம் உண்மையில் எத்தனை வலிமையுள்ளதென்று உணர்ந்து கொண்டாயா?'' என்று வினவினான் மதிவாணன்.

அறிவாளனுக்கு அணிகலன் அடக்கம், பெருந்தன்மை. இதற்கு மேல் மதிவாணன் வீரகேசரியைத் துன்புறுத்தாமல் விடுதலை செய்து வீரபாண்டியபுரத்தையும் அவனிடமே திரும்பிக்கொடுத்தான்.

மிருகபலம் மட்டுமே பெரிதல்ல என்ற படிப்பினையைப் பெற்ற வீரகேசரி கலாவல்லிபுரத்தைப் போல் தன் பட்டணத்திலும் கல்வியும் செல்வமும் தழைக்கச் செய்யும் முயற்சியில் முனைந்தான்.

அன்றிலிருந்து இவ்விரு மன்னர்களும் பெரும் நண்பர்களாக வாழ்ந்தனர்.




## டிக்..டிக்..டிக்...

இரவும் பகலும் இடை விடாமல்
இது என்ன ஓசை—டிக்டிக்டிக்?—மணி
சரிவரக் காட்டும் சிறு கடிகாரம்
செய்கின்ற ஓசை டிக்டிக்டிக்....

மணிஐந் தாச்சே மகனே எழுந்துன்
மனப்பா டங்கள்செய் டிக்டிக்டிக்—எந்தக்
கணிதமும் போடு கவிதையும் பாடு
கரெக்டாக வரும் டிக்டிக்டிக்....

நேரத்தில் குளித்து நேரத்தில் சாப்பிடு
நேரத்தில் பள்ளிசெல் டிக்டிக்டிக்—கடி
கரத்தைப் பார்த்து, கணம் தவறாது
கடமைகள் செய்திடு டிக்டிக்டிக்....

சிறு கடிகாரம் ஜதி தவறாமல்
சீராய் ஓடுவது டிக்டிக்டிக்—மணி
அறிந்துகொண் டெதையும் அவசர மின்றி
அழகாய்ச் செய்திடு டிக்டிக்டிக்....

விளையாடச் சென்றால் விளக்குவைத் திடுமுன்
வீட்டுக்கு வந்திடு டிக்டிக்டிக்—பின்
களைப்பா றியநீ கதைகளைக் கேட்டுக்
காலத்தில் தூங்கிடு டிக்டிக்டிக்!

—'லெமன்'



# சிவப்புக்கல்

கி. தாமோதரன்

சோழ நாட்டை விக்கிரமன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அப்போது ஒரு கிராமத்தில் மாதவன் என்னும் சிறுவன் தன் தாயாருடன் வசித்துவந்தான். அவனுடைய ஒழுங்கையும் பணிவையும் கண்டு ஊரில் உள்ள எல்லாரும் அவனிடம் மிகவும் பிரியமாக இருந்தார்கள்.

மாதவனின் தாயார் பக்கத்து வீடுகளில் வேலைகள் செய்து பிழைத்து வந்தாள்.

ஒரு நாள் மாதவன் வீட்டில் சமைப்பதற்கு ஒன்றுமே இல்லாமற் போய்விட்டது. பள்ளிக்கூடத்திலிருந்து பசியுடன் திரும்பி வந்தான் மாதவன். சாப்பாட்டுக்குப் பதிலாக அவன் தாயார் ஒரு மாம்பழத்தை மட்டும் அவனிடம் தந்தாள்.

கடுமையான பசி மாம்பழத்தைக் கண்டதும் மாதவனுக்குக் கோபம்தான் வந்தது. சாப்பாடுதான் வேண்டும் என்று பிடிவாதம் செய்தான். அவன் தாய் என்ன செய்வாள் பாவம்!

''ஒரு காசு சம்பாதித்துக் கொண்டு வந்து கொடுக்கத் தகுதி இல்லை. அப்படியிருக்கச் சோறு வேண்டும் என்று கேட்க மட்டும்

அறிவு இருக்கிறதா?'' என்று கடிந்துகொண்டாள்.

என்றைக்கும் தன் தாயார் அவ்வளவு அதிகமாகத் திட்டியதில்லை. இன்று கடிந்து கொண்டாளே என்று மாதவனுக்கு வருத்தமும் ஆத்திரமும் வந்தன. பேசாமல் தாயார் கொடுத்த மாம்பழத்தை எடுத்துக் கொண்டு ஒரு மரத்தடியில் போய் உட்கார்ந்து அழுதபடியே இருந்தான்.

கொஞ்ச நேரம் கழிந்திருக்கும். அந்த வழியே சாது ஒருவர் வருவதைக் கண்டு மாதவன் எழுந்து நின்றான். அவர் அருகே வந்ததும் தன்னிடம் இருந்த மாம்பழத்தை அவரிடம் அளித்துப் பணிந்து நின்றான்.

சிறுவனுடைய அடக்கமும் அன்பும் சாதுவின் உள்ளத்தைக் கவர்ந்தன. அவனுடைய முகம் வாடியிருப்பதைக் கவனித்த சாது உடனே சிறுவனை விசாரித்தார்.

மாதவன் தன் வீட்டில் நடந்த அனைத்தையும் மறைக்காமல் சொன்னான்.

''அப்பா, குழந்தாய். நீ பட்டினி கிடக்கக்கூடாது என்பதற்காக உன் தாயார் தினந்தோறும் எவ்வளவு கஷ்டப்படுகிறாள் என்பதைச் சற்று யோசித்துப் பார். ஏதோ ஒரு நாளைக்கு உணவு கிடைக்கவில்லை என்பதற்காகக் கோபித்துக் கொள்ளலாமா?'' என்று சாது நிதானமாகக் கேட்டார்.

மாதவன், சாதுவின் புத்திமதியைக் கேட்டதும் வெட்கத்துடன் தலைகுனிந்து கொண்டான். ''ஆம். நான் தவறு செய்துவிட்டேன். அம்மாவிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். இனி இப்படி முறை தவறி நடக்க மாட்டேன்'' என்று மாதவன் பணிவான குரலில் சொன்னான்.

''இதோ, உன் தாயார் தந்த மாம்பழத்தை நீயே பெற்றுக் கொள்'' என்று சாது மாம்பழத்தைச் சிறுவனிடம் திருப்பித்தர நீட்டினார்.

''வேண்டாம். உங்களைப்போன்ற ஒரு பெரியவருக்கு ஒரு பொருளை அளித்துவிட்டுத் திரும்ப வாங்கிக் கொள்வது சரி அல்ல'' என்று மாதவன் அந்தப் பழத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டான்.

அவனுடைய பெருந்தன்மை சாதுவின் உள்ளத்தில் பதிந்துவிட்டது.

''குழந்தாய், உன்னை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. உனக்கு ஏதாவது ஒரு பொருளை அளிக்க விரும்புகிறேன். அதை மட்டும் நீ எவருக்கும் தந்துவிடாதே. அந்தப் பொருளை ஒரு வருஷம் நீ வைத்திருந்தால் உன்னைச் செல்வம் தானாகவே தேடி வந்தடையும்'' என்று சொல்லி ஒரு சிவப்புக் கல்லைக் கொடுத்தார்.

மாதவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. சிவப்புக் கல்லைப் பெற்றுக்கொண்டு வீட்டுக்குச் சென்றான். தன்னுடைய புத்தகப் பெட்டியில் வைத்துக் கொண்டான். அதைப்



''என்னடா! இது: சிலேட்டுக் குச்சியை இரண்டா ஒடிச்சிருக்கியே?''

''இது என்ன தாத்தா, ஒரு பிரமாதம்! சிலேட்டையேகூட இரண்டா ஒடிப்பேன்!



பியாண்டுக்காரர்: ''ஏன் ஸார், நீங்களும் பியாண்டு வாசிக்க கத்துக்குங்களேன்!''

பருமனான ஆசாமி: நமக்கும் அதுக்கும் எட்டாதுங்களே!

---

பற்றி அவன் யாரிடமும் சொல்லவே இல்லை. தினம் ஒரு முறை சிவப்புக் கல்லைக் கையில் எடுத்துப் பார்த்து ஆனந்தப்படுவான்.

* * *

பத்து மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் மாதவன் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தான். அப்பொழுது வழியில் கூட்டம் கூட்டமாக மக்கள் நின்று பேசுவதைக் கவனித்தான்.

''ராஜகுமாரனுக்கு உடம்பு சரி இல்லை.''

''படுத்த படுக்கையாகக் கிடக்கிறான்.''

''அவனுக்கு நோய் ஒன்றும் கிடையாது. ஏதோ மனக் கவலை.'' —இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசிக்கொண்டார்கள்.

''ராஜகுமாரன் ஒரு சிவப்புக் கல்லை வைத்திருந்தான். அவன் அதைத் தொலைத்துவிட்டான். அது திரும்பக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கமே வியாதியாக மாறிவிட்டது. இழந்த சிவப்புக் கல் திரும்பக் கிடைத்தால்தான் இளவரசன் பிழைப்பான்'' என்றனர் சிலர். இந்தச் செய்தியை மாதவன் தெரிந்துகொண்டான்.

மாதவன் வீட்டுக்குச் சென்றதும் பெட்டியிலிருந்த சிவப்புக் கல்லைக் கையில் எடுத்துப் பார்த்தான். நாமே வைத்திருந்தால் நம் தரித்திரம் தீர்ந்துவிடும். அப்படியிருக்க இந்தக் கல்லை எப்படி அரசகுமாரனுக்குக் கொடுப்பது என்று நெடு நேரம் யோசனை செய்தான்.

தன்னுடைய சௌக்கியத்தை விட நாட்டின் நன்மைக்குக் காரணமாக இருக்கக்கூடிய அரசகுமாரனின் உயிரே பெரியது. நமக்குச் செல்வம் வந்தால் என்ன, வராவிட்டால் என்ன என்று மாதவன் இறுதியாகத் தீர்மானித்துவிட்டான்.

கடைசியில் சிவப்புக் கல்லைப் பத்திரமாக எடுத்துக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான் மாதவன்.

நோயால் படுக்கையில் கிடந்த இளவரசனைக் கண்டு அவனிடம் சிவப்புக் கல்லைக் கொடுத்தான். தான் இழந்த சிவப்புக் கல்லைத் திரும்பப் பெற்றதும் அவன் கண்கள் மலர்ந்தன. அவன் நோய் இருந்த இடம்தெரியாமல் மறைந்துவிட்டது. நன்றி மிகுதியால் மாதவனை இளவரசன் தழுவிக் கொண்டான்.

இளவரசனின் நோயைத் தீர்த்த மாதவனுக்கு, மன்னன் பொன்னும் மணியும் ஏராளமாக வழங்கினான். சிவப்புக் கல்லை வைத்திருந்தால் தரித்திரம் தீர்ந்துவிடும் என்று தெரிந்தும் அதைத் தியாகம் செய்தான். ஆனால் அதே சிவப்புக் கல்லால், எதிர்பாராமல் கிடைத்த செல்வத்தைக் கண்டு மாதவன் இறைவனுக்கும் சாதுவுக்கும் மனமார அஞ்சலி செலுத்தினான்...



# ஒட்டகம்

## பெ. நா. அப்புஸ்வாமி

'ஒட்டகத்திற்கு எத்தனை கோணல்!' என்று நாம் ஒட்டகத்தை இகழ்கிறோம். அது நம்முடைய கண்ணுக்கு அருவருப்பான உருவம் உடையதாகத் தோன்றுகிறது. ஆனால் அதை நம்பி வாழும் அரபு நாட்டு மக்கள், நாம் பசுவைப் பாராட்டுவதைப் போல, அதைப் பாராட்டுகிறார்கள். அன்பாக வளர்க்கிறார்கள். ஒட்டகத்தின் பால் அவர்களுக்கு உணவாக உதவுகிறது. அங்குள்ள பாலைவனங்களைக் கடக்க அது அவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கிறது. ஆகையால் ஒட்டகத்திற்குப் 'பாலைவனக் கப்பல்' என்றும் ஒரு பெயர் உண்டு.

**உடலின் அமைப்பு:** வறண்டு, நீரற்ற, மணற்பாங்கான பாலைவனத்தைக் கடப்பதற்கு ஏற்றபடி அதன் உடல் அமைந்திருக்கிறது. அதிகப் பருமன் இல்லாத உடல். நீண்ட கால்கள். மணலில் பதியாதபடி அகலமாகப் பரந்த பாதங்கள். பாலைவனத்திலே மணலை வாரி வீசும் மணற்காற்று நெஞ்சுக்குள்ளே மணலைத் தூவி விடாதபடி, அவைகளுக்கு நாசித் துவாரத்தை அடைத்துக் கொள்ளக்கூடிய திறமை உண்டு, நாம் நம்முடைய கண்களை இமைகளால் மூடிக்கொள்ளும் திறமையைப் பெற்றிருப்பது போல. அங்கே அருகில் வளரும் முட்செடிகளிலும். புதர்களிலும், உள்ள இலைகளை விரும்பித் தின்பதற்கு ஏற்றபடி உதடும், நாவும் பல்லும் ஜீரணிப்பதற்கு ஏற்ற வயிறும் அமைந்துள்ளன.

**சிறந்த திறமை:** இவை எல்லாவற்றையும் விட ஒட்டகத்தின் மிகச் சிறந்த திறமை அது தண்ணீரையே அருந்தாமல், நாடாமல், வனாந்திரத்தைக் கடக்கும் அற்புதத் தன்மை. ஒட்டகம் இவ்வாறு நம்மைவிட நெடுநாள் தண்ணீரே குடியாமல் இருப்பதற்குச் சாதாரணமாக ஒரு காரணம் கூறப்படுகிறது, ஒட்டகம் பாலைவனத்தில் யாத்திரை தொடங்குமுன், ஏராளமாகத் தண்ணீர் குடித்து, தன் உடலில் உள்ள, பீப்பாய் போன்ற தனி வயிறு ஒன்றில் அந்த நீரைச் சேமித்து வைக்கிறது என்றும், பாலைவனத்திலும் நீர் கிடைக்காதபோது வேண்டும் அளவுக்குச் சிக்கனமாக, அந்த நீரை அது உபயோகித்து வருகிறது என்றும், சாதாரண ஜனங்கள் நினைக்கிறார்கள். இது சரியன்று. ஏராளமாகத் தண்ணீரைக் கொட்டி வைப்பதற்கு என்று ஒட்டகத்தின் உடலினுள்ளே தனி வயிறு ஒன்றும் இல்லை. அதிகத் தண்ணீர்ச் செலவில்லாமல் தன் காரியங்களை நடத்துவதற்கு ஏற்றபடி ஒட்டகத்தின் உடல் அமைந்திருக்கிறது. வெப்பம் மிகுதியான அந்தப் பிரதேசத்திலும் அதன் உடல் அதிகம் வியர்ப்பது இல்லை; மிகக் குறைவாகவே வியர்க்கிறது; அதன் நா உலர்ந்து போகாமலும் நாவின் வழியாக உடலின் ஈரம் வெளிப்படாமலும் இருக்கும் பொருட்டு, அது சாதாரணமாகத் தன் வாயை இறுக மூடிக் கொண்டேயிருக்கும். அது எவ்வளவு விரைவாக ஓடினாலும், நாய்க்கு இறைப்பது போல், அதற்கு இறைப்பது இல்லை.

அது சூரியனின் வெப்பத்தையும், வெயில் மேலே உறைப்பதால் உடலில் உண்டாகும் மிகுதியான வெப்பத்தையும் அது மற்றப் பிராணிகள் பலவற்றைக் காட்டிலும் நன்றாகத் தாங்க வல்லது. ஆகையால் தன் உடலின் வெப்ப நிலையைக் குறைத்து, சௌகரிய

மான நிலையை அடையும் பொருட்டு தன் உடலிலிருந்து நீரை ஆவியாக்குவது அதற்கு அவசியம் இல்லை. நமது வியர்வையின் உபயோகங்களில் இதுவும் ஒன்று என்பது உங்களுக்குத் தெரியுமே!

அதன் உடலில் உள்ள நீர் வர வரக் குறைந்து, ரத்தத்திலுள்ள நீர்ப்பகுதி சுருங்கி, அதன் ரத்தமானது இளம் பாகு போலக் கெட்டியாக ஆனாலும்கூட அது துன்புறுவதில்லை; நோய்வாய்ப்பட்டு வருந்துவதில்லை. அப்போதுகூட அது நல்ல ஆரோக்கிய நிலையிலேயே இருக்கிறது.

அது மிக நெடுங்காலமாக வறண்ட பிரதேசத்திலேயே தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வாழ்ந்து பழகி விட்டபடியால், பெரும்பான்மையும் ஈரம் அற்றுக் கிட்டத்தட்டக் காய்ந்த கட்டையைப் போன்ற உடல் நிலையும் அதற்கு அநேகமாக இயற்கையான நிலையாக ஆகி விட்டது.

**காரணம்:** ஆயினும் அது தண்ணீரே அருந்தாத அத்தனை நாட்களும் அதன் உடலின் செயல்கள் நடப்பதற்கும், அது தளர்ச்சியுறாமல் பாலைவனத்தைக் கடந்து விரைவாகச் செல்வதற்கும், சக்தியும் நீரும் வேண்டும் அல்லவா? இவை இரண்டையும் அது தன் முதுகிலுள்ள திமிலிலிருந்து பெறுகிறது. அந்தத் திமிலில் அது சேகரித்து வைத்திருக்கும் கொழுப்பானது அப்போது மெல்ல மெல்ல ஆக்ஸிஜனோடு கலந்து, சக்தியையும் நீரையும் ஒட்டகத்திற்கு உதவி வருகிறது. ஆகவே ஒட்டகமானது தன் உடலின் ஒரு பகுதியைக் கரைத்து, அதன் மூலமாகத் தன் உடலைப் பாதுகாத்தும் தன் வேலையை நடத்தியும் வருகிறது.

அதற்குத் தனியான வயிறு ஒன்று இருக்கிறது என்னும் கற்பனையைவிட, இந்த உண்மை இன்னும் ஆச்சரியமான விஷயம் அல்லவா?

---



# புகைவண்டி

'தமிழ் ஒளி'

ஓடி வருகுது புகைவண்டி!
உறுமி வருகுது புகைவண்டி!
பாடி வருகுது புகைவண்டி!
பட்டணம் வருகுது புகைவண்டி!

நீள வருகுது புகைவண்டி!
நீந்தி வருகுது புகைவண்டி!
காளம் ஊதுது புகைவண்டி!
'கடகட' வென்குது புகைவண்டி!

தொலைவில் வருகுது புகைவண்டி!
தொடர வருகுது புகைவண்டி!
நிலையம் வருகுது புகைவண்டி!
நிற்க வருகுது புகைவண்டி!

விமலா ரமணி



# குற்றச்சாட்டு

எல்லோர் முகத்திலுமே பீதி பிரதிபலித்துக் கொண்டிருந்தது! மிராசுதார் பொன்னம்பலம் சீறினார்:—"நான் நல்லவர்களுக்கு நல்லவன். பொல்லாதவர்களுக்குப் பொல்லாதவன். உண்மையை ஒப்புக் கொள்ளுங்கள். வைர மோதிரத்தைத் திருடியது யார்? நான் வீணாகப் போலீஸுக்குத் தொந்தரவு தர விரும்பவில்லை. இன்னும் இருபத்தி நான்கு மணி நேரம் தருகிறேன். இந்த அவகாசத்திற்குள் குற்றவாளி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு விடவேண்டும். இதற்குள் வைர மோதிரம் என்னிடம் வந்து விட வேண்டும். குற்றவாளி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்டால் அதற்காக நான் தண்டனை ஒன்றும் வழங்கி விட மாட்டேன். பயப்பட வேண்டாம்." மிராசுதார் உள்ளே போய் விட்டார்.

அவருடைய மனைவிக்கும், மகளுக்கும் இனி தங்கள் பொருள் வருமோ, வராதோ என்ற கலவரம்! 'போலீஸைக் கூப்பிட மறுக்கிறாரே இந்த மனிதர்!' என்று குழம்பியவாறே அவர்களும் உள்ளே நடந்தனர்!

உண்மையில் பொன்னம்பலம் மிகவும் நல்லவர். அடிதடியை விரும்பாதவர். 'குற்றவாளி போலீஸில் அகப்பட்டால், அவனை அவர்கள் குற்றுயிராக்கிவிடுவார்கள். எனவே அன்பினால்தான் இழந்த பொருளை அடைய வேண்டும்! யார் எடுத்திருப்பார்கள்?' என்று யோசனையில் ஆழ்ந்தார்.

வெளியே குழம்பியவாறே நின்றனர் மூவர்! முதல் இருவர் வேலைக்காரக் கந்தனும், அவன் மகன் சோமுவும்! இவர்கள் இந்த வீட்டை வேலைக்காக அடைந்து கிட்டத்தட்ட இருபது வருடங்கள் ஆகிவிட்டன! இதுவரை கந்தன்

மீது ஒரு புகாரும் கிடையாது. நல்லவன். நாணயமானவன். தன் உழைப்பின் மீது நம்பிக்கை உண்டு அவனுக்கு! அவன் மகன் சோமு. ஆம்; சோமு ஒரு வயதுக் குழந்தையாக இருந்தபோதுதான் கந்தன் பொன்னம்பலத்தை நாடினுன். இருவரும் பொன்னம்பலத்தின் தோட்டத்து வீட்டிலே அடைக்கலம் புகுந்திருந்தனர். தந்தையைப் போலவே தனயனும் நல்லவன். இது கந்தனின் எண்ணம்!

மூன்ருவது சமையற்கார சுப்பு! அவன் இந்த வீட்டிற்கு வந்து கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன! போன தடவை பொன்னம்பலம் வெந்நீர் ரூமில் வைத்திருந்தத் தங்க மோதிரத்தை எடுத்து அவரிடம் தந்தவன் அல்லவா அவன்!

யார் எடுத்திருப்பார்கள்? இவர்கள் மூவரையும் தவிர அந்த வீட்டில் நுழைபவர்கள் யாருமில்லை! தோட்ட வேலைக்குக் கந்தனும், வீட்டு வேலைக்குச் சோமுவும், சமையலுக்குச் சுப்புவும்—இவர்களைத் தவிர யார் அங்கே வந்திருப்பார்கள்?

* * *

யோசித்தவாறே தன் குடிசையில் அமர்ந்திருந்தான் கந்தன். இன்னும் சில மணி நேரங்களே பாக்கி! பிறகு?—குற்றவாளி தன் குற்றத்தை ஒப்புக் கொள்ளாவிட்டால்..? யார்மீது பழி வருமோ? அந்தக் கிழட்டு மூளை கிறுகிறுத்தது. மடியில் கை வைத்துப் பார்த்தான் அவன், பொடி வாங்கச் சில்லறை அதில் இருக்குமோ என்று! அவன் மடி மட்டும் கனக்கவில்லை, அவன் நெஞ்சைப் போல்!

தன் மகனிடம் ஏதாவது சில்லறை இருக்கும் என்று எண்ணிய அவன், மகனின் பெட்டியைத் திறந்தபோது—அங்கே..?

'பளிச்'சென்று கண்ணைப் பறித்தது வைர மோதிரம்! திடுக்கிட்டான் கிழவன்! சோமுவா இந்த வேலையைச் செய்தவன்? அவன் மகன் சோமுவா? நம்ப முடியவில்லையே அவனுல்! வேதனை அவன் நெஞ்சை அரித்தது! ஒரு கணம் யோசித்தான் கிழவன். "இன்னு செய்தாரைல் ஒறுத்த"—என்ற திருக்குறள் அவனுக்குத் தெரிய நியாயமில்லை. எனினும் அவன் கால்கள் வேகமாக நடக்க வாரம்பித்தன, அவனது எஜமானின் பங்களாவை நோக்கி!

* * *

எல்லோரும் ஒரு கணம் அரண்டு விட்டனர்! இவ்வளவு விசுவாசத்துடன் பழகிய கந்தனு இப்படிச் செய்தான்? பொன்னம்பலம் ஒன்றும் பேசவில்லை.

சோமு தன் தந்தையை வெறுப்புடன் பார்த்தான்! சுப்புவின் முகத்திலோ வியப்பு! ஆனுல் கந்தன் உச்சி முகட்டையே உற்றுப் பார்த்தவாறு நின்ருன்!

* * *

அந்தக் குற்றத்தை தானே ஒப்புக்கொண்டான் கந்தன். இதைக் கேட்டுத் தன் மகன் பாகாய் உருகிவிடுவான்; தன்னிடம் மன்னிப்பும் கேட்பான் தன் செய்கைக்கு என்று எதிர்பார்த்த கந்தனுக்கு ஏமாற்றம் தான் காத்திருந்தது! சோமு அவனுடன் பேசுவதும் கிடையாது! அவனைப் பார்ப்பதும் கிடையாது! ஏன்? ஏன்?—கந்தனுக்கும் தனது மகனின் முகத்தைப் பார்க்கவே வேம்பாய்க் கசந்தது!

அந்தச் சின்னஞ்சிறு அறையில் தந்தையும், மகனும் இருந்தபோதும் அவர்கள் பேசிக் கொள்ளவில்லை! நாட்கள் பல நகர்ந்தன. முப்பது நாட்கள் ஆனபிறகு மாதம் என்ற பெயருடன் அந்த நாட்கள் கழிந்தன! பிறகு—ஒரு நாள்—

பொன்னம்பலத்தின் மனைவியினுடைய வைர மாலையைக் காணவில்லை! எல்லோருமே திடுக்கிட்டனர். பொன்னம்பலத்தின் கண்கள் கந்தனை ஊடுருவின! கந்தனே தன் மகனின் முகத்தைப் பார்த்தான்! தன் தந்தையின் கண்களோடு தன் கண்களை இணைக்க விரும்பாத சோமு தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

இவர்களையெல்லாம் வேடிக்கை பார்த்தான் சுப்பு. மீண்டும் பழைய கட்டளையையே பிறப்பித்தார் பொன்னம்பலம்.

* * *

தள்ளாடித் தள்ளாடித் தன் வீட்டை நோக்கி நடந்த கந்தனின் கண்கள் இருண்டன. 'சோமு! பாதகன்! என்ன செய்துவிட்டான்! மாலை அவன் பெட்டியில் இல்லாவிட்டால்..?'

அதே சமயம் சோமு தன் தந்தையின் பெட்டியைத் திறந்தான்! அவன் நினைத்தது போல் 'வைரமாலை' ஒன்று மின்னியது பெட்டியில்!

'அப்பா! எவ்வளவு மோசமானவர்! அன்று மோதிரத்தைத் திருடி விட்டுக் குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்டார். இன்று இந்த வைர மாலையையும் திருடியிருக்கிறார். ஏன்?'

ஒரு விநாடி யோசித்தான் சோமு. தன் தந்தைக்குச் சரியான பாடம் கற்பிக்க நினைத்தான்!

* * *

சோமு கூறிய அந்தச் செய்தி யாவரையும் வியப்பில் ஆழ்த்தியது. "தான் தெரியாமல் வைர மாலையை எடுத்து விட்டதாயும், இனி தான் அப்படிச் செய்வதில்லை" என்றும் கூறினான் அவன்.

பொன்னம்பலம் யோசித்தார்!

போன தடவை தந்தை திருடினான்! இந்தத் தடவை மகன்! ஏன் இப்படி மாற்றி மாற்றித் திருடி விட்டுக் குற்றத்தையும் ஒப்புக் கொள்கின்றனர்? ஒன்றும் புரியவில்லை அவருக்கு! அப்போது—

பொன்னம்பலத்தின் தோழரான இன்ஸ்பெக்டர் ராஜன் அங்கே வந்தார்!

"என்ன விஷயம்?"—என்று விசாரித்த அவரிடம் எல்லாவற்றையும் கூறினார் பொன்னம்பலம். பொருள் கிடைக்காமல் போலீஸில் புகார் செய்தால், குற்றவாளியை நையப் புடைப்பார்கள் போலீஸார்! இப்போதுதான் பொருள் கிடைத்து விட்டதே! மேலும் ராஜன் பொன்னம்பலத்தின் ஆருயிர்த் தோழன்!

பொன்னம்பலம் கூறிய விவரம் ராஜனைச் சிறிது நேரம் சிந்திக்க வைத்தது. ஒரு மாதத்திற்கு முன் நடந்தத் திருட்டில் தந்தை குற்றவாளி; இப்போது மகன்! மேலும் திருடியதோடு அவர்கள் உடனே



குற்றத்தையும் ஒப்புக் கொண்டு விட்டனர்! ஏன்?

பொன்னம்பலத்தின் கையி லிருந்த அந்த மாலையை வாங்கிப் பார்த்தார் ராஜன். மறுகணம் அவர் கண்கள் வியப்பினுல் விரிந்தன! உடனே—கந்தனை நோக்கி—

"கந்தா, உண்மையைச் சொல். போன தடவை நீ மோதிரத்தைத் திருடினுயா?"—

கந்தன் நடந்தவற்றைக் கூறினுன். மகனுக்காகத்தான் குற்றத்தை ஒப்புக் கொண்டதாகக் கூறினுன். உடனே சோமு—

"ஐயோ—இல்லை; நான் எடுக்கவே இல்லை. என் தந்தை பொய் சொல்கிருர். அன்று அவர் திருடியதாகக் கூறிக் குற்றத்தை ஒப்புக்கொண்டார், அன்று முதல் அவர்மீது எனக்கு வெறுப்பு தான் வளர்ந்தது. அவருடன் நான் முகம் கொடுத்துக்கூடப் பேசுவது கிடையாது. பிறகு இன்று இந்த 'வைரமாலை' களவு போனதும், இதையும் ஒரு வேளை அவர்தான் எடுத்திருப்பாரோ என்று அவர் பெட்டியைத் திறந்தேன். அதில் மாலை இருந்தது. எனவே என் தந்தைக்காக இந்தக் குற்றத்தை நான் ஒப்புக் கொண்டேன். உண்மையில் நான் திருட வில்லை. மோதிரத்தையும் சரி, மாலையையும் சரி!" என்ருன்.

சோமு இவ்வாறு கூறியதைக் கேட்ட கந்தன் திடுக்கிட்டான்! "என் பெட்டியில் இந்த மாலை எப்படி வந்தது?" என்று அவன் உள்ளம் எண்ணியது.

இந்தச் சமயம்—

"காபி கொண்டு வருகிறேன்" என்று உள்ளே நுழைந்த சுப்புவைத் தடுத்து நிறுத்தின ராஜாவின் கைகள்!

சுப்பு திடுக்கிட்டான்!

ராஜன் கூறினுர். "குற்றவாளி கந்தனும் அல்ல, சோமுவும் அல்ல! இந்த மாலை உண்மை வைர மாலையும் அல்ல!"

எல்லோரும் அசந்து விட்டனர். ஒரு கணம் எல்லோர் முகத்திலும் பயமும் வியப்பும் பரவியிருந்தன.

"பின்?" என்று கேட்டார் பொன்னம்பலம்.

"ஐயோ என் மாலை!" என்று அலறினுள் அவர் மனைவி. அவர்களை அடக்கிய ராஜன் கூறினுர்:

"குற்றவாளி சுப்புதான்! வெகு நாட்களாகச் சமயம் எதிர் நோக்கி இருந்திருக்கிருன் இவன். வீட்டு மோதிரத்தையும், மாலையையும் நன்கு கவனித்திருந்த அவன் அதேபோல் போலி ஒன்றைச் செய்து சமயத்தையும் எதிர் நோக்கியிருந்திருக்கிருன்! பொன்னம்பலம் நல்லவர், போலீஸ் உதவியை நாடமாட்டார் என்பதையும் தெரிந்துகொண்டான்.

"போலீஸ் உதவியை நாடினுல் தானே அசல், போலி என்ற விவரம் வெளியாகும்? மேலும் கந்தனுடனும், சோமுவுடனும் நன்கு பழகிய அவன் அவர்களின் நேர்மையை ஓரளவு அறிந்திருக்கிருன். ஆனுல் தந்தைக்காக மகனும், தனயனுக்காகத் தகப்பனும் குற்றங்களைத் தங்கள் மீதே சுமத்திக் கொள்ள முயல்வார்கள் என்று அவன் நினைத்திருக்க முடியாது! 'எப்படியும் தன் பெட்டியில் மோதிரத்தைக் கண்டால் சோமு அதை எஜமானனிடம் கொடுத்துவிடுவான். தன் பொருளை அடைந்த பொன்னம்பலம் அதுபற்றித் தீர எங்கே விசாரிக்கப் போகிருர்?' என்று எண்ணி அசல் மோதிரத்தைத் தான் எடுத்துக் கொண்டு, போலியைச் சோமுவின் பெட்டியில் போட்டிருக்கிருன்.

"அவன் நினைத்தது நடந்தது. அதாவது சோமுவுக்குப் பதிலாகக் கந்தன் ஒப்புக்கொண்டான் குற்றத்தை! சுப்புவின் மூளை மீண்டும் வேலை செய்தது! மறுபடியும் ஒரு திருட்டுச் செய்தான்! அதையும் அந்த ஏழைகளின்மீதே சுமத்தி விட்டான்! ஒரு திருட்டையாவது தன்மீது சுமத்திக் கொள்ளவில்லை அவன். காரணம் இதில் துளிக்கூட தான் சம்பந்தப்பட்டுவிடக் கூடாது என்று எண்ணினுன் அவன். எல்லாம் நன்கு நடந்தது அவன் விருப்பப் படி. கடைசியில் நான் புகுந்து இப்போது கெடுத்துவிட்டேன்!

''இந்தத் திருட்டு எல்லாம் ஒரு வாறு ஓய்ந்து இதன் அமளி அடங்கிய பிறகு தன்னிடமுள்ள அசலை விற்றுப் பணத்துடன் கம்பி நீட்டி விடலாம் என்று கண்டான் அவன். பொருள் நிரந்தரமாகத் தொலைந்து விட்டால் போலீசுக்குத் தகவல் போகும். பிறகு அசலைப் பெற்றுக் கொண்டு கடையில் சென்று காசாக்க முடியுமா? அதனால் தான் இப்படிச் செய்துவிட்டான்.''

இவ்வாறு கூறிய ராஜன் சுப்புவைப் பார்த்து, ''நான் கூறியது சரிதானா?'' என்றார்.

சுப்பு தலை குனிந்தான்.

ராஜன் தொடர்ந்தார்: ''இந்தப் பெட்டிக்குப் பின்னால் ஒட்டிக் கொண்டிருந்த கரிதான் சுப்புவைக் காட்டிக்கொடுத்து விட்டது! பாவம்! இந்த வீட்டில் அடுப்புப் பக்கத்தில் போகிறவன் இவன் ஒருவன்தானே!''

எல்லோருமே இதைக் கேட்டுத் திடுக்கிட்டு நின்றனர்!

கந்தனும் சோமுவும் ஒருவருக்கு ஒருவர் பார்த்துக் கொண்டனர்! அந்தப் பார்வையில் இப்போது துவேஷம் இல்லை. பாசம்தான் இருந்தது!

சுப்புவின் கைக்கு ரிவார்டு ஏறியது! அவன் ஒளித்து வைத்திருந்த இடத்திலிருந்து அப்புறப் படுத்தப்பட்ட அசல் வைர மோதிரமும் வைர மாலையும் பொன்னம்பலத்திடம் போய்ச் சேர்ந்தன.

---

# கடவுள் எங்கே?

அக்பர் சக்கரவர்த்தியின் சபையில் பீர்பால் என்ற மந்திரி இருந்தார். அவர் சிறந்த மதியூகி. அவர்மீது அக்பருக்கு அன்பும் அதிக நம்பிக்கையும் உண்டு.

இருந்தாலும் ஒரு நாள் பீர்பாலைத் திக்கு முக்காடச் செய்ய எண்ணி, ''அமைச்சரே! ''கடவுள் என்று ஒருவர் எங்கும் இருப்பதாகக் கூறுகிறார்களே, அது சரிதானா?'' என்றார் சக்கரவர்த்தி.

''ஆம்; அதில் என்ன சந்தேகம்!'' என்றார் பீர்பால் பணிவாக.

''இதோ என் கையில் இருக்கும் மோதிரத்தில்கூட அவர் இருக்கிறார்; இல்லையா?''

''ஆம்; அதில் என்ன சந்தேகம்?''

''சந்தேகம்தான். இல்லாவிட்டால் கேட்பேனா? அவர் இருப்பதை நம்மால் காண முடியவில்லையே! அதை எப்படி நிரூபிப்பீர்கள்?''

இதற்குச் சரியான விடைகூற முடியாமல் பீர்பால் ஒரு வார காலம் அவகாசம் கேட்டார். சொல்கிற விடையை யாரும் மறுக்கக் கூடாது அல்லவா? ஐந்து நாள் ஆகியும் பீர்பாலுக்குத் தெளிவு ஏற்படவேயில்லை. அவர் வாட்டத்துடன் உட்கார்ந்திருந்தார். அப்போது தற்செயலாக ஓர் இளம் துறவி அவரிடம் பிக்ஷைக்கு வந்தார்.

''முகத்திலே வாட்டம் ஏன்?'' என்று கேட்டார்.

பீர்பால் அவரிடம் தம் மனக் கவலையைக் கூறினார். உடனே துறவி, ''இதற்கு ஏன் வீண் கவலை? என்னை அரசனிடம் அழைத்துப் போய், அவர் சந்தேகத்தை நான் போக்குவதாகக் கூறிவிடுங்கள். பார்க்கலாம்'' என்றார். அதே போல் துறவியை அக்பரிடம் அழைத்துச் சென்றார் பீர்பால்.

''ஒரு குவளை நல்ல தயிர் வேண்டுமே!'' என்று கேட்டார் துறவி.

கடையாத கட்டித் தயிர் வந்தது. அதைப் பார்த்துவிட்டு, ''வெண்ணெய் இல்லாத தயிரை நான் அருந்துவதில்லை!'' என்றார் துறவி.

''இது கடையாத தயிர். வெண்ணெயே எடுக்கவில்லை. கடைந்தால் தெரியும்'' என்று விடை கூறினார் சக்கரவர்த்தி.

உடனே துறவி துள்ளிக் குதித்து, ''அப்படித்தான் ஆண்டவனும் எல்லாவற்றிலும் மறைந்திருக்கிறார். பக்தியால் கடைந்து, பிறகு ஞானக் கண் கொண்டு பார்க்க வேண்டும். லேசாக முடியாது'' என்றார்.

அக்பர் பீர்பாலைப் பார்த்துத் தலையை அசைத்து ஆமோதித்தார்.

# நீங்களும் நானும்

ஆர்வி

**என். இந்திரா, கும்பகோணம்.**

கே: சினிமா நல்லதா, கெடுதலா?

ப: நல்ல படங்களாக வந்தால் யாரும் பார்ப்பதில் கெடுதல் இல்லை. சினிமாவில் வரும் நடிகைகள்தான் நல்ல பெண்கள், மற்றப் பெண்கள் உபயோகமில்லை என்ற கருத்து நம் பிள்ளைகளுக்கு இருப்பதுபோல் பேச்சு நடைபெறுகிறது. வாழ்க்கையில் தவறான அதிருப்தியையும் கிடைக்காத பொருள்மீது ஆசையையும் தூண்டிவிடும் முறையில் இன்றைப்பெரும்பாலான படங்கள் இருப்பதால் அவை கெடுதல் என்று கூறுகிறோம். மற்றப்படி சினிமா நல்லது - கெடுதல் என்ற சர்ச்சைக்கு இடமே இல்லை. எதையும் நாம் பயன்படுத்துவதைப் பொறுத்துத்தான் நன்மையும் தீமையும் விளைகின்றன. அது ஒரு வலிமைமிக்க சாதனம்.

**ஜி. எஸ். எஸ். குமாரசுவாமி, கோட்டை (இலங்கை).**

கே: இன்பத்துக்கும் துன்பத்துக்கும் எல்லையுண்டா?

ப: உண்டு; ஒன்றின் எல்லையிலே மற்றொன்று இருக்கிறது.

**கு. சா. கணபதி, ஆண்டிப்பட்டி.**

கே: வணங்காமுடி, மக்களைப் பெற்ற மகராசி என்ற படங்களில் எது சிறந்த படம்?

ப: இதைத் தெரிந்து கொண்டு நீ சாதிக்கப்போது என்ன என்று முதலில் எழுது. பிறகு நான் என் கருத்தைச் சொல்கிறேன். தமிழ்ப் படங்களில் பெரும்பாலும் திருட்டுக் கதைகள். மேல் நாட்டாரைப் போல் கதை எழுதும் ஆசிரியர்களுக்குப் போதிய மதிப்பும் தருவதில்லை. அதனால் நானும் தமிழ் சினிமாக்களுக்கு அதிக மதிப்புத் தருவதில்லை. நீ எதைச் சாதிக்கப் போகிறாய் என்று தெரிந்தால் நான் போய்ப் பார்த்து விட்டு வந்து சொல்கிறேன்.

**கா. வேலுசாமி, பு. காளிகுறிச்சி.**

கே: இந்தி ஆட்சிமொழி ஆவதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: ஆகட்டுமே நூறு ஆண்டுகள் கழித்து. அதுவரையில் அதற்குப் பதிலாக ஆங்கிலமே இருக்கட்டும் என்பதுதான்.

**ஆர். சுந்தரராஜ், மன்னார்குடி.**

கே: பர்மாவில் இப்பொழுது வாழும் தமிழர்களின் எண்ணிக்கை என்ன? அவர்களுக்காகத் தமிழ் வானொலி உண்டா?

ப: இப்பொழுது எவ்வளவு தமிழர்கள் இருக்கிறார்கள் என்று அதிகாரிகளுக்கு எழுதிச் சரியான விவரம் கேட்டிருக்கிறேன். அயல் நாடுகளில் உள்ள தமிழர்களுக்காக டில்லியிலிருந்து வெளிநாட்டுச் சர்விஸ் மூலம் தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன.

**ஆர். ராமன், பட்டுக்கோட்டை.**

கே: ஒலிம்பிக் விளையாட்டை முதல் முதல் ஏற்படுத்தியவர் யார்?

ப: ஒலிம்பிக் விளையாட்டுக்களை முதலில் ஆரம்பித்து வைத்தவர்கள் புராதன கிரேக்கர்கள். இதை அவர்கள் பலகாலமாக நாலு ஆண்டுக்கு ஒரு முறை பெரிய விழாவாகக் கொண்டாடி வந்தார்கள். கி. மு. 1222-இல் ஹெராக்ளீஸ் என்ற மன்னன் இதைத் தொடங்கியதாகக் கூறப்படுகிறது. அந்தக் காலத்தில் பெண்கள் இந்த விளையாட்டுக்களைப் பார்க்கக் கூடாது என்றும் தடை செய்திருந்தார்கள். இப்போது நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுக்களைச் சர்வ தேச ரீதியில் புதுப்பித்தவர் பேரன் டி குபர்ட்டின் என்ற பிரஞ்சுக் கல்வி நிபுணர். இது 1896-முதல் நடைபெற்று வருகிறது.

2/1811
சென்னை-600 00



**தமிழ்நாடன், மேட்டுப்பாளையம்.**

கே: தமிழ் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர், பேச்சாளர், புலவர், கவிஞர் யார் யார்?

ப: சொன்னால் சிலர் சண்டைக்கு வருவார்கள் அப்பா. இங்குள்ளவர்களுக்குச் சிஷ்ய சேனைகள் அதிகம். ஐந்தாறு பேர்களை ஒன்றில் சேர்த்து ஒன்றில் சேர்க்காமல் விட்டுவிட்டால் வீண் வம்புதான். அவர்களை எல்லாவற்றிலும் சேர்த்தால்தான் அவர்களுக்கும் திருப்தி; அவர்கள் சீடர் குழாத்துக்கும் திருப்தி. அப்பொழுதுதான் என்னைத் தப்ப விடுவார்கள். இல்லையோ, மொட்டைக் கடிதம்; பயமுறுத்தல் கடிதம், நேரிலேயும் மிரட்டல் - எல்லாம் கிடைக்கும். இந்த வெறி அடங்கி, ஒளி புலப்படும் வரையில் இந்தமாதிரிக் கேள்விக்குப் பதில் சொல்வது பெரிய சோதனையான காரியம்.

**என், சீனிவாசன், மேட்டுப்பாளையம்**

கே: என் உடம்பெல்லாம் தேமல் படர்ந்திருக்கிறது. மருந்து ஏதாவது சொல்வீர்களா?

ப: உடலிலே தேங்காய் எண்ணெயைத் தடவி அதிகாலையில் நல்ல சுத்தமான தண்ணீரில் அழுக்குத் தேய்த்து ஸ்நானம் செய்து வந்தால் போதும்; தேமல் மறைந்துவிடும்.

**சுந்தரராமன், சென்னை-4**

கே: பணம் என்றால் என்ன?

ப: ஏழைகளின் புதிர்; அவர்கள் கண்களை மறைக்கும் மந்திர மை.

**எஸ் அருணாசலம், புதுக்கோட்டை**

கே: விமானத்தில் காக்பிட் என்பது எது?

ப: விமானி உட்காரும் இடம்.

**கிரிஜா, புனா-2**

கே: பத்திரிகைகளில் ஸாட்டிலைட் (Satellite) என்ற வார்த்தைகள் அடிபடுகின்றன. அதற்கு என்ன பொருள்? ரஷ்ய சந்திரனைத்தான் அப்படிக் குறிப்பிடுகிறார்களா?

ப: ஸாட்டிலைட் என்றால் உபக்கிரகம் என்று பொருள். சந்திரன் ஓர் உபக்கிரகம். சூரியனைச் சுற்றும் நேர் கிரகம் அல்ல சந்திரன். சந்திரன் பூமியைத்தான் சுற்றுகிறது. பூமியுடன் சேர்ந்து சூரியனையும் சுற்றுகிறது. ஒரு கிரகத்தைச் சுற்றினால் அதற்கு உபக்கிரகம் (Satellite) என்று பெயர்.

**பி. கலியப்பெருமாள், குற்றாலம்**

கே: ராஜன்பாபு வயதில் பெரியவரா? நேரு வயதில் பெரியவரா?

ப: ராஜன்பாபு பிறந்த தேதி: 3-12-1884. நேருஜி பிறந்த தேதி: 14-11-1889. நேரு ஐந்து வயது: சின்னவர்.

**ஜி. சுவாமிநாதன், கும்பகோணம்**

கே: எங்கள் ஆசிரியர் ஒருவர் அடிக்கடி எங்களை அதிகமாய் வெண்டைக்காய் சாப்பிடும்படி சொல்வார். அதனால் அவருக்கு 'வெண்டைக்காய்' என்று பட்டப் பெயரே சூட்டிவிட்டார்கள்!

ப: உங்களைப் பார்த்து அவர் அடிக்கடி ஏன் அப்படிச் சொன்னார் என்பது இப்பொழுதுதான் புரிகிறது. வெண்டைக்காயிலுள்ள பாஸ்பரம் மூளையை விருத்தி செய்ய உதவுகிறது. உங்களுக்கு அது மிகவும் அவசியமான பொருள் என்று தெரிந்துதான் வற்புறுத்துகிறார் போலிருக்கிறது! இல்லாவிட்டால் நல்லது சொல்வதைப் புரிந்துகொள்ளாமல் அவருக்குப் பட்டம் கட்டுவீர்களா?

**ராஜு, கோட்டயம்**

கே: தங்கச் சுரங்கம் அமெரிக்காவில் அதிகமா?

ப: இல்லை; தென்னாப்பிரிக்காவில்தான் அதிகம். ஆண்டுதோறும் உலகத்துக்குத் தேவையான தங்கத்தில் பாதிக்குமேல் அன்றாடம் வெட்டி எடுக்கப்படுகிறது. அங்கே 53 தங்கச் சுரங்கங்கள் இருக்கின்றன.

**அப்துல்ரஹீம், குடியாத்தம்**

கே: மனிதன் எத்தனை வயது வரை உயரத்தில் வளருகிறான்?

ப: இருபத்தைந்து வயது வரையில்.

**கே. ஏ. முகமது அலி, சிதம்பரம்**

கே: ரஷ்ய சந்திரனில் சென்ற நாய் லைகா ஏழே நாட்களில் அமரப் புகழ் பெற்றுவிட்டது அல்லவா?

ப: ஆமாம்; அதேபோல ஜெர்மன் நாய் ஒன்று அழியாப் புகழ் பெற்றது. அது முதல் முதல் சினிமாவில் சேர்ந்து நடித்தது. 1924-இல் சினிமாவில் புகுந்த ஜெர்மன் நாய் ரின் டின் டின் ஏழு வருஷ காலம் சினிமாவில் நடித்துப் புகழ் பெற்றது. அதன் பெயருக்குத் தினசரி 1500 கடிதங்கள் வருமாம். இருபத்திரண்டு படங்களில் அது நடித்து, கோடிக் கணக்கான டாலர்களைச் சம்பாதித்துக் கொடுத்தது. இப்பொழுதுகூட ரின் டின் டின் நாயின் பேரனுக்குப் பேரனுன ஏழாவது ரின் டின் டின் டெலிவிஷன்களில் நடித்து வருகிறது.

**கே. ஈசுவரன், கல்கத்தா-29**

கே: ஹிந்து மதத்தின் சிறப்பு என்ன?

ப: அமெரிக்க சுப்ரீம் கோர்ட் நீதிபதியின் வார்த்தைகளைத் தருகிறேன்: "ஹிந்து மதம் வெறி பிடித்த மதம் அல்ல. விசால உள்ளம் கொண்டு எதையும் ஏற்கும் விரிந்த மதம். ஒவ்வொரு மனிதனிடமும் தெய்வாம்சம் இருப்பதாக அது காண்கிறது. சாமானிய மக்களிடம் இந்தத் தெய்விகக் கனலை எழுப்பிவிடுவதே ஹிந்து மகான்களின் வேலை. பக்தி, ஒழுக்கம், நியமம் இவற்றின் மூலம் மனிதன் தெய்வ நிலையை எய்தலாம் என்பதே ஹிந்து மதத்தின் கொள்கை."

**கா. ஆறுமுகம், சேலம்**

கே: வீரர்களை உருவாக்கிய மூன்று ஞானிகளைக் கூறுங்கள்.

ப: மகாவீரன் அலெக்ஸாண்டரை உருவாக்கினுன் கிரேக்க ஞானி அரிஸ்டாட்டில். மகாவீரன் சந்திரகுப்தனை உருவாக்கி உயர்த்தினுன் அரசியல் ஞானி கௌடில்யன் (சாணக்கியன்). மகாராஷ்டிர மகாவீரன் சிவாஜியை உருவாக்கினுர் மகாஞானி சமர்த்த ராமதாஸர். சிஷ்யர்களுக்குப் பிரம்மசரியம், வீரம், புத்தி மூன்றும் புகட்டிய ஞானிகள் இவர்கள்.

**எஸ். குமுதவல்லி; நாகப்பட்டணம்**

கே: என் தலைமயிர் உதிர்கிறது. சில தைலங்களை உபயோகித்ததால் ஓரிரு நரைகள்கூட ஏற்பட்டுள்ளன. இதற்கு மருந்து ஏதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

ப: ஏ வைட்டமின் குறைவினுல் மயிர் உதிர்கிறது என்று கூறுகிருர்கள். பி வைட்டமின் குறைவினுல் நரை ஏற்படுகிறது என்கிருர்கள். நான் கேள்விப்பட்டதுடன் அநுபவத்திலும் பார்த்தமுறை தேங்காய் எண்ணெயை நிறையத் தடவி காலை மாலை வேளைகளில் மெதுவாகச் சிக்கெடுத்து வாரிக்கொண்டால் போதும் என்பதே. தலைமயிர் வளரத் தேங்காய்ப் பாலை உபயோகித்தால் நல்லது. அதைத் தலை முழுவதும் நன்ருகப் புரட்டித் தேய்த்து ஸ்நானம் செய்தால் கூந்தல் உதிராமல் வளரும். நரைக்கு மருதாணி எண்ணெய் தடவ வேண்டும். மருதாணி இலையை ஒன்றிரண்டாய் இடித்து, எண்ணெயில் இட்டு, கருகாமல் காய்ச்சி இறக்கி வைத்துக்கொள்வதே மருதாணி எண்ணெய். ஸ்நானத்துக்குச் சீக்காயே போதும். அது மண்டைக்குக் குளிர்ச்சி தருவது. கூந்தலை மிருதுவாகவும் மினுமினுப்பாகவும் ஆக்குவது. இந்த முறைகள் சுலபம்; பலன் நிச்சயம்.

**கி. முத்துநடராசன், மாவேலிக்கரை**

கே: உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன?

ப: திட்டங்கள் எதுவும் நான் போட்டுவைத்துக் கொள்ளவில்லை. பத்திரிகைத் தொழிலைவிடப் பிரிதொரு தொழிலை விரும்பவில்லை. பத்திரிகைகளில் கதைகள் எழுதுவதோடு ஊர் ஊராகச் சென்று குழந்தைகளைக் கூட்டி, அவர்களுக்கு நேரிலே அழகழகான சிரிப்புக் கதைகள் சொல்லி மகிழ்விக்க வேண்டும் என்பதே என் ஆசை. முடிந்த வரையில் அதை இப்போதும் செய்து வருகிறேன். இனி அதிகமாகச் செய்ய விருப்பம்.

**க. சண்முகம், புதுக்கோட்டை**

கே: தமிழில் குழந்தைகளுக்கு ஏற்ற மலிவுப் புத்தகங்கள் இருக்கின்றனவா?

ப: இல்லை; மலிவுக் கதைகள் அதிக விலையில் இருக்கின்றன.

கதை: 'ஆர்வி'

# கடற் புலி

சித்திரம்: ஸாமி




அவர்கள் கூட்டத்தில் கலந்து நின்றும் அவர்களை யாரும் கவனிக்கவில்லை. கடற்புலி கையிலுள்ள வாள் முனை முறிந்து கையிலிருந்து விழ, நிராயுதபாணியாக நின்றான். அப்போது, . . .
ஒரு கணம் திகைத்து நின்ற கடற்புலி, மறுகணமே முனை முறிந்த வாளைக் குனிந்து எடுக்கிறான்.
ஹா! ஹோ!
கடற்புலி சற்று ஒதுங்க, ஓங்கிக் குத்த வந்த காட்டுமிராண்டித் தலைவன் வாள், தரையிலே குத்திக்கொண்டு விட்டது.
ஹா!
ஹா!
ஹா!
கண் இமைக்கும் நேரத்தில் கடற்புலியின் முனை முறிந்த வாள், தலைவன் முதுகிலே பாய்ந்துவிடுகிறது!
ஹோ! ஹோ!

(தொடரும்)

# சுதந்தரக் குரங்கு

## ஜி. ஜயராமன்

"ஐயாவுக்குச் சலாம் போடுடா, ராமா! ராமா, ராமா! நீ லங்கே தாண்டுடா ராமா! ஐயா வீட்டு மாட்டை மேச்சு வாடா ராமா!'' என்று குரங்காட்டி குறவையா தனக்கே உரிய ராகத்தில் பாதி கவிதையிலும் பாதி உரை நடையிலுமாகப் பாடிப் பேசி, கைக்கோலால் குரங்கு ராமனை ஆடவைத்துக் கொண்டே தெருவில் நடந்தான். தூரத்தில் அவன் குரல் கேட்டதுமே, ''அடேய் கிட்டு, சீதா! ராஜு! குரங்குடா வா, வா!'' என்று எல்லோருக்கும் அறிவித்துக் கொண்டே ராமு தெருவில் ஓடினான். அவன் மட்டுமா? அந்தத் தெருக் குழந்தைகளெல்லோருமே அப்படித்தான்! என்றைக்குமே குறவையாவுக்கும் அவன் 'ராம'னுக்கும் நல்ல வரவேற்பளிப்பது வழக்கம்.

குறவையாவின் குரங்கு ரொம்ப கெட்டிக்காரக் குரங்கு. அதற்கு வால்மட்டும் இல்லாமலிருந்தால் வால் இல்லாத ரங்குவுக்கு உறவு என்றுகூடச் சொல்லலாம். இது ராமுவின் தாழ்மையான அபிப்பிராயம். ரங்குவும் ராமுவைப் பற்றி அதே அபிப்பிராயம்தான் கொண்டிருப்பானோ என்று கேட்காதீர்கள். அது ஊரறிந்த ரகசியம்.

இது நிற்க, நம் கதாநாயகக் குரங்கைச் சற்றுக் கவனிப்போம். அவர் குறவையாவிடம் சில காலமாக இருந்து வந்தார். வித்தைகள் செய்வதில் ஸ்பெஷலிஸ்ட்தான். அதனால் நிறையச் சம்பாதிப்பார். எஜமான் குறவையா ரொம்ப நல்ல மனிதன். வரும் அழுகல் வாழைப் பழங்களிலோ. சொத்தைக் கடலையிலோ துளியும்தான் எடுக்கமாட்டார். அதற்குப் பதிலாக உபயோக மற்றக் காசில் சிறிதளவையும் அதன் தலையில் சுமத்த மாட்டார்.

ஒவ்வொரு நாள் வேலை முடிந்ததும் இருவரும் தெரு முனையிலுள்ள டீக்கடைக்குப் போவார்கள். வெளியே உள்ள லாந்தல் கம்பத்தில் குரங்காரைக் கட்டிவிட்டு எஜமானன் உள்ளே போய் சாப்பிட்டு வருவது வழக்கம். இதைப் போலத்தான் அன்றும் நடந்தது.

அன்று குறவையாவுக்கு நல்ல வரும்படிதான். குரங்காரின் பங்குதான் குறைவு. ராமுவின் வீட்டில் கிடைத்த இரண்டு வாழைப் பழங்கள்தான் அதற்குக் கிடைத்தவை. வருத்தத்தோடு பழங்களை உரித்துத் தின்ன ஆரம்பித்தது அது. அந்தச் சமயம் கடையின் உள்ளிருந்து பலவகையான வாசனைகளை அள்ளி வீசிக் கொண்டே ஓர் ஈ குரங்காரின் கைப்பழத்தின் மீது உட்காரப் பார்த்தது. குரங்கு பழத்தைத் தின்ன முயன்ற வேகத்திலே மிரண்டு போய் அதன் காதுப்புறம் பறந்து, ''என்ன அண்ணா, சுகமா?'' என்று அக்கறையாக விசாரித்தது. குரங்குக்கு வந்த வயிற்றெரிச்சலிலே, ''குர் குர் அட போடா, நீ ஒருத்தன், கஞ்சிக் காகப் பகவானை நினைக்கிற வேளையிலே தொல்லை!'' என்று அலுத்துக் கொண்டே விரட்டப் பார்த்தது. ''ஊம்! ஞானம் பத்தாது, நல்லது கெட்டது தெரிந்து கொள்ளவே ஞானம் பத்தாது'' என்று பாடிக்கொண்டே குரங்கின் காதைச் சுற்றிச் சுற்றிப் பறந்தது. பிறகு அதன் முதுகிலே போய் ஜம்மென்று உட்கார்ந்தபடி பேச ஆரம்பித்தது:

''அண்ணா! உனக்கு ஞானம் போதாது. உனக்கு நல்லது சொல்ல வந்தால் என்னையே விரட்டுகிறாய். உன்னை அடிமைப் படுத்தி உன் உழைப்பிலே பிழைப்பவனுக்குப் பல்லைப் காட்டுகிறாய். உம்; எல்லாம் உங்கள் ஆஞ்சநேயர்

செய்த வேலை, நீங்கள் எல்லோரும் அடிமையாய்ப் போனீர்கள். ஐயோ பாவம்'' - ஈ தனது இரண்டு கண்களாலும் நாலு சொட்டுக் கண்ணீர் சிந்தியது. இதற்கிடையே குரங்கு முதுகை வளைத்து - வாலைச் சுழற்றி ஈயை விரட்ட முயன்றது. முடியாமல் போகவே, ''அப்பனே. நீ சொல்வதைக் கேட்கிறேன். கொஞ்சம் முதுகை விட்டு எழுந்திரேன்'' என்று பரிதாபமாகக் கெஞ்சிற்று. ஈ வெற்றி வீரனைப் போல் பறந்து குரங்கின் தலையிலே உட்கார்ந்து சொல்ல ஆரம்பித்தது. ''குரங் கண்ணா! அதோ உள்ளே பார்! உன் எஜமானன் எத்தனை சொகுசாய்ச் சாப்பிடுகிறான். உனக்கு ஏதாவது ஒன்று கொண்டுவந்து கொடுத்தானா? அவன் சாப்பிடும் பணம் எங்கிருந்து வந்தது? உன் வித்தையால்தானே? ஆனால் உனக்குக் கிடைத்தது வெறும் அழுகல் பழம்தானே?'' குரங்கு உள்ளே பார்த்து விழித்தது. ஈ மேலும் தொடர்ந்தது.

''உழைப்பது யார்? நீ; உல்லாசமாக இருப்பவன் அவன். பாடு உன்னுடையது; பலன் அவனுடையது. உன்னைப்போல் சலாம்



போட அவனால் முடியுமா? நீ மாடு மேய்க்கும் அழகு என்ன; இலங்கை தாண்டும் வீரம் என்ன; உன் முக அழகு, உன் குழிந்த கண், நீண்ட வால், உன் வளைந்த முதுகு; அடாடாடாடா! நானும் எத்தனையோ ஊர்களில் எத்தனையோ பேர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் உன்னைப் போல் ஒருவரையும் பார்த்ததே இல்லை. இருந்தாலும் நீ மனிதனுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறாய். நீ சுதந்தரத்தை ருசி பார்த்திருக்கிறாயா? ருசி! என்ன இனிமை! என்னைப் பார்! நான் எவ்வளவு சின்னவன்? இருந்தாலும் நான் அடிமை இல்லை. எங்கேயும் போவேன்; எதன் மீதும் உட்காருவேன். சாக்கடையும்



டீக்கடையும் எனக்குச் சமம். என்னைத் தடுக்க யாரால் முடியும்? எல்லாவற்றிக்கும் சுதந்தரம் தானே காரணம்?''

''ஆமாம் தம்பி, நீ சொல்வது நிஜம்தான். ஆனால் அதற்கு என்ன செய்வது? உன்னைப் போலப் பறக்க என்னால் முடியாதே?'' என்று கேட்டுத் தலையைச் சொறிந்து கொண்டது. ஆனால் அசட்டு ஈ பயந்து போயோ என்னவோ, ''சுதந்தரமாகத் தொழில் செய்து பிழை'' என்று மட்டும் சொல்லிவிட்டுப் போய் விட்டது. 'அடாடா! என்ன முட்டாள் நான்! அதற்குள் அவசரப்பட்டு அவனை விரட்டி விட்டேனே! போனால் போகட்டும்; நானே யோசித்து ஒரு வழி இதற்குக் கண்டு பிடிக்காவிட்டால் அப்புறம் நானும் ஒரு குரங்கா?' என்று தனக்குள்ளாகவே சொல்லியபடி யோசிக்க ஆரம்பித்தது. நன்றாக யோசித்து ஒரு முடிவுக்கும் வந்தது.

மறு நாள் முதல் குறவையாவின் அடிமையாக இல்லாமல் சுதந்தரக் குரங்காகத் தொழில் நடத்துவது என்ற முடிவுதான் அது. குரங்கு செய்த நேரம் நல்லதாகத்தான் இருக்கவேண்டும். ஏனென்றால் அன்றிரவு குறவையா அதைச் சரியாகக் கட்ட மறந்து விட்டான். எனவே குரங்கு சுலபமாகவே தன்னைப் பிணைத்திருந்த அடிமைத் தளையிலிருந்து விடுபட்டுச் சுதந்தரம் அடைந்தது.

சுதந்தரம் அடைந்த குரங்கு குறவையாவின் தடியையும் எடுத்துக் கொண்டு தொழில் நடத்தப் புறப்பட்டது. முதல் முதலில் தனக்கு வழக்கமாகப் பழம் தரும் ராமுவின் ஞாபகம்தான் அதற்கு வந்தன. உடனே நேராக அவன் வீட்டை நோக்கி ராஜ நடைபோட்டது. அதைக்கண்ட இரண்டொரு தெரு நாய்கள் தங்கள் ஆட்சேபணையைத் தெரிவித்துக் குரைத்தன. ஆனால் அதற்கெல்லாம் சுதந்தரக் குரங்கு பயந்துவிடுமா? ''குர்..குர்.. சும்மா இருங்கள்'' என்று மிரட்டிக் கொண்டே மேலே நடந்தது. ராமுவின் வீட்டு வாசலில் யாருமே இல்லை. எல்லோரும் உள்ளே படித்துக்கொண்டிருந்தார்கள். குரங்கு முதலில் சும்மா சலாம் அடித்துப் பார்த்தது. பிறகு கோலைத் தோளில் சாத்திக்

கொண்டு மாடு மேய்த்துக் காட்டியது. பிறகு கோலைக் கடலாக நினைத்துத் தாண்டியும் பார்த்தது. யாரும் வெளியே வரும் வழியாக இல்லை அதற்கு மேலும் பொறுக்க அது இன்னமும் அடிமைக் குரங்கா என்ன?

நேராகக் கப்பம் கேட்க உள்ளே நுழைந்தது. ஒரு மூலையில் ராமு புத்தகங்களைக் கட்டிக்கொண்டு அழுதுகொண் டிருந்தான்.

மற்றவர்களும் ஏதோ வேலையாக இருந்தார்கள். முதல் முதலாக அதன் கண்ணில் பட்டது ஒரு கண்ணாடிதான். அதைப் பார்த்தவுடனே குரங்குக்கு முதலில் ஈ சொன்னதெல்லாம் ஞாபகம் வந்தது. 'நான்தான் மனிதர்களைவிட அழகானவனாயிற்றே! அவர்கள் அழகு பார்க்கும்போது நான் ஏன் பார்க்கக் கூடாது?' என்று நினைத்துக்கொண்டு அது நேராகக் கண்ணாடியிடம் போய் அதில் தன் அழகைப் பார்த்தது. 'அடாடா என்ன அழகு! என்னைப் போல யார் இருக்கிறார்கள்? நிஜமாகவே நான் ரொம்ப அழகுதான்' என்று நினைத்துப் பலவித சேஷ்டைகள், கோணங்கிகள் செய்து அழகு பார்த்து ரசித்தது. அப்பொழுது யாரோ, ''குரங்கு! கு ர ங் கு! கண்ணா!'' என்று வீரிட்டச் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தது. 'உஸ் உஸ்' - ராமு கம்பைக் காட்டி விரட்டப் பார்த்தான். கிட்டு கல்லை எடுத்து விரட்டப் பார்த்தான். ராஜி அம்மாவிடம் சொல்ல உள்ளே ஓடினாள். விஷயம் தெரிந்து அக்கம் பக்கத்திலிருந்து சிலர் வந்து கூடினார்கள். சிலர் கையில் கிடைத்த பொருள்களை அதன்மீது பிரயோகித்தார்கள். குரங்கார், 'உர் குர்.. சும்மா இருங்கள்' என்று உத்தரவு போட்டுவிட்டு, கண்ணாடியோடு ஜன்னலுக்கு வெளியே தாவினார். அங்கிருந்து திண்ணை, திண்ணையிலிருந்து கூரை, அங்கிருந்து மரம் என்று பிரயாணம் செய்ய ஆரம்பித்தார். அவர் ஓட ஆரம்பித்ததுமே கூடி இருந்தவர்களுக்குத் தைரியம் வந்து, ''விட்டேனா பார்!'' என்று கூச்சல் போட்டுக் கொண்டு துரத்த ஆரம்பித்தார்கள். நன்றி கெட்ட மனிதர்கள்! குறவையாவுடன் போகும்போது அவர்கள் அதற்கு எவ்வளவு மரியாதை கொடுத்தார்கள்? ஆனால் இப்பொழுது தெருவில் போனவர்கள்கூட நின்று ஒரு கல் போடும் காரியத்தைச் செய்துவிட்டுப் போனார்கள். போதாக்குறைக்கு காக்கைகளும் நாய்களும் வேறு கூச்சல் போடும் தொண்டைச் செய்தன. கற்கள் பட்டுச் சில இடங்களில் காயங்கள் வேறு. குழப்பத்தில் கண்ணாடியும் எங்கேயோ விழுந்துவிட்டது. கீழே இருந்த பையன்களோ அதன் வேலையில் பாதியைச் செய்துகொண் டிருந்தார்கள். இந்தச் சமயம் குரங்குக்கு நல்ல புத்தி மெல்லத் தலை தூக்கியது. 'அட குரங்கே! உன் புத்தி ஏனடா இப்படிப் போச்சு? சிவனே என்று எஜமானனிடம் இருக்கப் படாதா? சொந்தப் புத்தி இல்லாமல் திண்டாடலாமா?' என்று உபதேசம் செய்ய ஆரம்பித்தது. மரத்தின் மேலிருந்த குரங்கார் இஞ்சி தின்றாற் போல் விழித்தார். நல்ல வேளையாக ஆபத்பாந்தவனாக குறவையா அங்கே வந்து சேர்ந்தான். ''ஐயாமார்களே! என் ராமனை என்னா செய்யுறீங்க? ஒண்ணும் செய்யாதிங்க, வாடா ராமா! உன்னை எங்கே யெல்லாம் தேடுறேன்! எங்கேடா பூட்டே? வாடா என் நயினா!'' என்று அன்போடு அழைத்தான். அவன் கையில் இரண்டு அழுகல் வாழைப்பழங்கள் இருந்தது. பிடி கடலையும் வைத்திருந்தான். குரங்கார் தப்பித்தோம் பிழைத்தோம் என்று குறவையாவின் தோளில் குதித்தார். குறவையா அன்போடு தடவிக் கொடுத்து வாழைப் பழத்தையும் கொடுத்தான். பிறகு, ''இனிமெ ஓடுவியாடா, ராமா? ஏனடா ஓடினே? கழுதைப்பயலே'' என்று செல்லமாக தட்டிக் கொடுத்தான். குரங்கார் நன்றியோடு உடம்பை வளைத்து முதுகை நெளித்தார். அதற்குப் பிறகு அது மிகவும் ஒழுங்காக இருப்பதாகக் கேள்வி.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன் கிளைக் கழகம்

அவிநாசி { உபதலைவர்: வே. சு. கிருஷ்ணமூர்த்தி
செயலாளர்: ப. ரா. சுப்பிரமணியன்
பொருளாளர்: நா. சின்னத்தம்பி }

பத்துப் பேர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'வாடா மலர்' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் நூல்நிலையம் ஒன்றும் நடத்தப் படுகின்றன. வே. சு. கிருஷ்ணமூர்த்தி, 9. அக்கிரகாரம், அவிநாசி என்ற விலாசத்துக்கு கதைகள் முதலியன அனுப்பலாம்.

கலித்திறம்பட்டு (தெ. ஆ. ஜில்லா) { உபதலைவர்: பி. ராமசாமி
செயலாளர்: கே. ராமலிங்கம்
பொருளாளர்: எம். கந்தசாமி பிள்ளை. }

உள்ளூர் எயிடெட் பள்ளி நிர்வாகி அவர்கள் ஆதரவில் பத்துப் பேர்கள் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டு, 'அறிவுச் சுடர்' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. வாசகசாலை, நூல் நிலையம், விளையாட்டுக் கிளப் முதலியன ஆரம்பிக்கப்பட விருக்கின்றன. விவரத்துக்கு எம். கந்தசாமி பிள்ளை, நிர்வாகி, ராமலிங்கம் எயிடெட் ஆரம்பப்பள்ளி, கலித்திறம்பட்டு, பெரியபாபு சமுத்திரம் போஸ்டு, தெ. ஆ. ஜில்லா என்ற விலாசத்துக்கு எழுதலாம்.

# பேனா நண்பர்கள்

1. ஆர். சந்தானம், 3/2 டங்கன் ரோடு, கர்க்கி, புனா-3
2. பி. எம். ராஜாமணி, சர்க்கார் மத்திய உயர்நிலைப்பள்ளி, செம்பகௌடா ரோடு, பெங்களூர்-2
3. பி. பி. வரதராஜன் 305, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-1
4. ஆர். கே. கல்யாணசுந்தரம், வன்னிவேடு போஸ்டு, வழி வாலாஜா (வ. ஆ.)
5. ஆர். பலராமன், 6. கன்னி கோயில் தெரு, திருவண்ணாமலை (வ. ஆ.)
6. டி. வில்லியம், ஆறும் படிவம்-ஆ. பிரிவு, நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி, எடப்பாடி, சேலம் ஜில்லா.
7. கே. சீனிவாசராகவன், 152, பாரதி வீதி, புதுச்சேரி.
8. ஏ. ராஜாமொகைதீன், 93, மேலப் பெருமாள் மேஸ்திரித் தெரு, மதுரை.
9. என். செல்வராஜா, 207/2, காலி ரோடு, ரட்மலானா, கல்கிசை, (இலங்கை).
10. எஸ். ஏ. இருதயம், (இராயதாசன்) அர்ச். சூசையப்பர் பாடசாலை, கம்பளை. (இலங்கை)
11. க. முத்துலிங்கம், டிவிஷன் நெ-8, அக்கறைப்பற்று. கி. மா. ஈழம் (இலங்கை)
12. எம். பக்கிர் முகமது, 14, குரு நாகல்ரோடு சிலாபம், இலங்கை.

## (பெண்கள் மட்டும்)

13. குமாரி எஸ். சுந்தரி, ஆர்யா நகர், கணேஷ்பவன், ஒரிஜனல் ரோடு, பஹார் கன்ஜ், புது டில்லி.
14. ப. மீனாக்ஷி, 444, ராஸ்தாபேட், புனா-2
15. பி. சுப்புலக்ஷ்மி, ஆறும் படிவம், கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு.

### அறிவிப்பு

புது டில்லியிலுள்ள குமாரி C. A. சாவித்திரிக்குச் சில பேனா நண்பர்கள் கடிதம் எழுதியிருப்பது என் கவனத்துக்கு வந்தது. 'பெண்கள் மட்டும்' என்று குறிப்பிட்டுள்ள சகோதரிகளுக்கு மாணவர்கள் கடிதம் எழுதுவது கூடாது. இனி இவ்விதம் நேராது என்று நம்புகிறேன். (ஆ-ர்.)

(Regd. as Newspaper in Ceylon.) **Reg. No. M. 5542**

# கண்ணன் வெளியீடுகள்

**தங்க மாம்பழம் - 'ராஜி'** ரூ. 2·00

ஒரு சிறுவனும் சிறுமியும் ஒரு மந்திரவாதக் கிழவி வீட்டில் சிறைப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் கையில் ஒரு தங்க மாம்பழம் கிடைக்கிறது. சிறையிலிருந்து தப்பி, கல்லறைத் தீவுக்குச் செல்ல முயல்கிறார்கள். கிழவியும் வீரப்பதேவன் என்பவனும் இதைத் தடுக்கிறார்கள். ஆனால் குழந்தைகள் இருவரும் மந்திரக் குதிரைமீது ஏறி மேலே பறந்து செல்கிறார்கள். சிறைக் கூண்டு கற்கண்டுக் கூண்டாக மாறுகிறது. பல திடுக்கிடும் சம்பவங்கள் கொண்ட அதிசய மான கதை.

**மஞ்சள் பங்களா - ஜி. ஐயராமன்** ரூ. 1·00

சதிகாரர்களிடையே இரண்டு சிறுவர்கள் அகப்பட்டுக் கொள்கிறார்கள். அவர்களைச் சிறைப் பிடித்துக் கொல்லவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் இரண்டு சிறுவர் களும் புத்தி வன்மையினாலும் சாமர்த்தியத்தினாலும் சதி காரர்களைக் கண்டுபிடித்து, காரியத்தையும் சாதித்துக் கொள்கிறார்கள். கடைசி வரி வரையில் விறுவிறுப்பும் பிர மிப்பும் உண்டாக்குகிற கதை.

**சைனா சு-சூ! - ஆர்வி** ரூ. 1.50

பிளாட்பாரத்திலே பத்திரிகைகள் சுமந்து விற்ற பையன், குடிசையிலே அநாதையாக வளர்ந்த பையன், ஒரு நாள் திடீரென்று பெரிய கோடீசுவரருடைய உயிரைக் காப் பாற்றப்போய், அவனே கோடீசுவரனாகவும் ஆகிறான். ஆனால் பிச்சைக்காரன் பிரபுவாக விளங்குவது அத்தனை உல்லாசமாக இருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் அவன் அநுபவம் கூறுகிறது. அவனுடைய உயிருக்கே ஆபத்து நேருகிறது. 'சைனா சு-சூ!' என்ற மர்மப் பை ஒன்றும் மற்றும் பல மர்மங்களும் அடங்கிய இந்தக் கதை முதலிலிருந்து கடைசிவரையில் சுவாரஸ்யமாகவும் விறு விறுப்போடும் செல்கிறது. ஆயிரக்கணக்கான குழந்தை கள் விடாமல் விரும்பிப் படித்த அருமையான கதை. நடு நடுவே அழகான படங்கள்.

**புலிக்குட்டி - சித்திரக் கதை - ஆர்வி: ஸாமி** ந. பைசா 40

அரசனிடம் விரோதம் கொண்ட வீரன் அரசன் மகனையே தூக்கிச் சென்று வளர்த்து, அரசன்மீதே பகைமை பாராட் டும்படிச் செய்கிறான். புலிக்குட்டி என்றால் நாடே கலங்கு கிறது. கண்ணனில் தொடர்ச்சியாக வெளிவந்த அருமை யான சித்திரக் கதை.

சந்தாதார்களுக்குக் கமிஷன் உண்டு.

கலைமகள் காரியாலயம், சென்னை-4.